உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்


மலர்-5 இதழ்-152

டிசம்பர் 16-31 2022


விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்




www.aanmeegamalar.com
e-magazine


## 27 நட்சத்திரங்கள் வணங்கும்

# சுயம்பு முருகன்

# சரஸ்வதி தேவியின் அரிய வடிவங்கள்



தமிழகத்தில் மற்ற தெய்வங்களைக் காட்டிலும் சரஸ்வதி தேவிக்கு அதிகப்படியான கோவில்கள் அமையவில்லை என்றாலும், சரஸ்வதி தேவி வீற்றிருக்கும் ஒருசில கோவில்களில் சற்று வித்தியாசமான கோலத்தில் காட்சிதருவது சிறப்பாகும். அந்த வகையில் வித்தியாசமான கோணத்தில் காட்சி தரும் தேவியைப் பற்றி பார்ப்போம்.

- நாகப்பட்டினம் மாவட்டம் கடலங்குடியில் வளையல், கொலுசு அணிந்தபடி சரஸ்வதி தேவி காட்சியளிக்கிறாள். கல்விகளில் புலமைத்துவம் பெற விரும்புபவர்கள் இந்த தேவியைவழிபட்டால், பலன் கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.
- சிருங்கேரியில் சரஸ்வதி தேவியானவள், மாணவி வடிவில் படிக்கின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறாள். அந்தப் பகுதியைச் சேர்ந்த மாணவ மாணவிகள் இந்த தேவியை வழிபட்ட பின்னரே பள்ளிக்குச் செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.
- சரஸ்வதி தேவியின் கையில் எப்போதும் வீணை இருக்கும். ஆனால் வேதாரண்யம், திருக்கோடிக்கா ஆகிய தலங்களில் வீற்றிருக்கும் சரஸ்வதி தேவி, வீணை இல்லாமல் காட்சி தருகிறார்.
- கர்நாடகா மாநிலம் பேலூர் என்ற ஊரில் நடனம் ஆடும் கோலத்தில் வீற்றிருக்கும் சரஸ்வதிதேவியை தரிசனம் செய்யலாம்.

www.aanmeegamalar.com

# உமாதேவியால் உருவான வற்றாத சுனை



www.aanmeegamalar.com

கர்நாடகா மாநிலம் சிருங்கேரி அருகில் 'கேசவே' என்ற திருத்தலம் அமைந்துள்ளது. இங்கு 'கமண்டல நதி கணபதி திருக்கோவில்' இருக்கிறது. இங்குள்ள விநாயகர் விக்கிரகத்தின் முன்பாக உள்ள ஒரு சிறிய துளையில் இருந்து தண்ணீர் பொங்கி வந்த படியே இருக்கிறது. (படத்தில் வட்டமிடப்பட்டுள்ளது)

வேத காலத்தில் உலகம் முழுவதுமே கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தது. அப்போது தாகத்தை தணிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் அனைத்து உயிர்களும் பரிதவித்தன. அப்போது அன்னை உமாதேவி இந்த கோவிலில் வீற்றிருக்கும் தன் மூத்த மைந்தனான கமண்டல கணபதி விக்கிரகத்திற்கு அடியில், வற்றாத தண்ணீர் சுனையை ஏற்படுத்தி உலக உயிர்களின் தாகத்தை தீர்த்ததாக தல வரலாறு கூறுகிறது.

சில நேரங்களில் பொங்கியும், சில நேரங்களில் சாதாரண அளவிலும் இந்த துளையில்இருந்து நீர் வந்து கொண்டேஇருக்கிறது. இந்த சுனை நீரைக் கொண்டு இங்கிருக்கும் தெய்வ விக்கிரகங்கள் அனைத்திற்கும் அபிஷேகம் செய்யப்படுகிறது. இதனை புனித தீர்த்தமாக கருதி பக்தர்கள் குடுவைகளில் பிடித்துச்செல்கின்றனர். விநாயகரின் முன்பாக உற்பத்தியாகும் புனித நீர், அங்கிருந்து 14 கிலோமீட்டர் தூரம் ஓடி துங்கா நதியில் கலக்கிறது.





www.aanmeegamalar.com



# பெருமாள் கோவில் தீர்த்தம் அருந்தும் முறையும் குறிப்பும்

பெருமாள் கோவில்களில் தரும் தீர்த்தத்தை அருந்துவதற்கும் ஒரு விதி உள்ளது.

தீர்த்தத்தை பெற்றதும், அதை எச்சில் படாமல் அருந்தவேண்டும், அதே வேளை மிகுந்த சப்தத் துடன் உறிஞ்சவும் கூடாது.

எச்சில் படாமல் தீர்த்தத்தை மருந்தை போன்று உட்கொண்டு மிகுதியை தலையில் தெளித்துக் கொண்டு, கைகளை அங்கவஸ்திரம், புடவை தலைப்பில் அல்லது கைத்துணியில் துடைத்துக் கொள்ளவேண்டும்.

தீர்த்தத்தை பெற்றுக் கொண்டு என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பு எழுதியுள்ளனர் முன் னோர்கள்.

ப்ருதிவ்யாம் யாநி தீர்த்தாநி
தேஷு ஸ்நாநே து யத்பலம்
விஷ்ணோ: பாதோதகம்
மூர்த்நா தாரயந் இதம் ஆப்நுயாத்
விஷ்ணோ: பாதோதகம்
பீத்வா பாசாதாசி ங்கயா
ஹஸ்தௌ ப்ரக்ஷாளயேத்
யஸ்து தமாஹு: ப்ரஹ்மகாதுகம்

இதன் பொருள்: ஒரே முறை பெருமாள் பாத தீர்த்தம் கொடுத்து அருந்தினாலும் போதுமானது. அதனை எச்சில் செய்யாமல் உறியாமல் அருந்தி மிகுதியை தலையில் தெளித்துக்கொள்ளலாம் அல்லது கைத் துணியில் புடவை தலைப்பில் உத்தரீயத்தில் சேர்க்கலாம்.

குறிப்புகள்:

பூமியில் இருக்கின்ற அனைத்து புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்கின்ற பலன் பெருமாள் தீர்த்தத்தை தலையில் தெளித்துக் கொள்வதால் கிடைக்கிறது.

தீர்த்தம் வாங்கி அருந்தும் போது எச்சில் பட்டுவிட்டது என்று சந்தேகம் கொள்பவர்கள், வெளியே வந்து கையை அலம்பி பிறகு உள்ளே வந்து சடாரி பெற்றுக் கொள்ள வேண்டும்.

எச்சில் கையோடு கை கூப்பி சடாரி வாங்குவது கூடாது.

எச்சில் கையோடு துளசி வாங்கினாலும் பாவம் சேரும்.

எச்சில் கையோடு எந்த பிரசாதம் பெற்றாலும் அதனால் எந்தப் பயனும் ஏற்படாது.



# சர்க்கரை நோயை குணப்படுத்த முன்னோர் கையாண்ட உணவு வழிமுறை

சக்கரை நோய்க்குக் காரணம் இன்சுலின் ஒழுங்காகச் சுரக்காதது தான்; ஆனால், இயற்கையாகச் சுரக்க ஒரே மருந்து உள்ளது. அது நமக்கு இயற்கையே கொடுத்துள்ளது.

நமது முன்னோருக்கு இந்த உண்மை தெரிந்ததால் அதை சரியான முறையில் கடைபிடித்தனர், அதனால் அக்காலத்தில் சர்க்கரை நோய் என்ற ஒன்று இல்லாமல் இருந்தது.

என்றைக்கு நாம் நம் முன்னோர்களை தவிர்த்தோமோ அன்றிலிருந்து நாம் சம்பாதிக்கும் அனைத்தும் மருத்துவமனைக்கு செலவழிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

அக்காலத்தில் சாப்பிடும்போது பேசாமல், மெதுவாக நன்றாக மென்று சாப்பிட சொல்லி கேள்விப்பட்டிருப்போம்.

அந்த வழிமுறை மட்டுமே நம் முன்னோருக்கு சர்க்கரை நோய் வராமல் பாதுகாத்தது என்றால் நம்ப முடிகிறதா?

இதுதான் உண்மை....

சர்க்கரை நோய் வராமல் தடுக்கும் அரு மருந்து நமது உடலிலேயே உள்ளது, நமது உமிழ்நீர்தான் நமது உடலில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தி வைத்திருந்தது.

சாப்பிடும்போது மெதுவாகவும் அதே நேரம் நன்றாக மென்றும் சாப்பிடும் பழக்கத்தை கடைபிடித்ததால், உணவுடன் நமது உமிழ்நீர் நன்றாக கலந்து, கணையத்தில் இன்சுலினைச் சுரக்கத் தூண்டும் இயற்கை மருந்தாக செயல்பட்டு, நமது உடலில் சர்க்கரை சேருவதை தடுத்து உடலை நல்ல ஆரோக்கியமாக வைத்திருந்தது.

பொறுமையுடனும், அமைதியுடனும், பொறுப்புடனும் உணவருந்துவதை வழக்கமாக வைத்திருந்த நமது முன்னோருக்கு உமிழ் நீரின் மகத்துவம் தெரிந்திருந்தது. அவர்கள் சாப்பிடும் உணவுடன் உமிழ்நீர் அதிக அளவு கலந்து



வயிற்றுக்குள் சென்றது.

மேலும் உமிழ்நீரை அதிகம் சுரக்கச் செய்யும் ஊறுகாய் என்ற உணவுப் பொருளை கண்டு பிடித்துப் பயன்படுத்தினர்.

கூடுதல் உமிழ்நீரைச் சுரக்கச் செய்வதற்காக அந்த ஊறுகாயைச் சிறிதளவு எடுத்துக் கொண் டனர்.

அதேபோல் உணவு உண்பதற்கு 30 நிமிடம் முன்னதாகவும் உணவு உண்டபின் 30 நிமிடம் கழித்தும் நாம் கடலைமிட்டாய், வெல்லம், பனங் கற்கண்டு, பனங்கருப்பட்டி இவற்றில் ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள்வதை வழக்கமாக வைத்திருந்தனர்.

தூண்டல், துலங்கல் என்ற விதியின் படி உமிழ்நீர் என்ற தூண்டுதலால் இன்சுலின் என்ற துலங்கல் சுரக்கப்படுகிறது என்ற விஞ்ஞானத்தை அன்றே அவர்கள் கடைபிடித்தனர்.

ஆனால் நாம் அவர்களின் வாழ்க்கை முறையை, நாகரீகம் என்ற போர்வையை போர்த்தி மறைத்துவிட்டு இன்று நோயாளி என்ற பட்டத்துடன் நமது தலைமுறை வாழ காரண மாகிவிட்டோம்.

மேலும், நமது வாழ்க்கையின் வேகம் அதிகரித்து விட்டது.

உணவு சாப்பிடும் வேகமும் அதிகரித்துவிட்டது.

வாழ்க்கைக்கான சாப்பாடு என்ற மனநிலை மாறி, சாப்பிடுவதும் ஒரு 'வேலை'தான் என்ற மனநிலைக்கு வந்துவிட்டோம்.

உணவை ரசித்து, ருசித்து; உமிழ்நீர் கலந்து சாப்பிடாமல், அவசர அவசரமாக வாயில் போட்டு விழுங்குகிறோம்.

நாம் விழுங்கும் உணவில் உமிழ்நீர் இல்லாததால், அந்த உணவுக்கு இன்சுலின் சுரக்காது.

உணவிலுள்ள குளுக்கோசு, கிளைக்கோசனாக மாறாமல், அது சக்கரையாகவே இரத்தத்தில் தங்கிவிடும்.

நாளடைவில் அது சக்கரை நோய் என்று அழைக் கப்படும் நீரிழிவு நோயாக மாறிவிடுகிறது.

சக்கரை நோய்க்கு மிகச்சிறந்த இயற்கை மருந்து நம் வாயில் ஊறும் உமிழ்நீர்தான்.

எனவே,

நாம் சாப்பிடும் ஒவ்வோர் உணவிலும் உமிழ்நீர் கலந்து சாப்பிடப் பழகிக் கொள்ள வேண்டும்.

நாம் குடிநீர் அல்லது தேநீர் அருந்தினால் கூட உமிழ்நீர் கலந்துதான் வயிற்றிற்குள் அனுப்ப வேண்டும்.

# பெற்றதாய் - வளர்த்ததாய்

# இரண்டுமுறை லீலைகளை அரங்கேற்றிய கண்ணன்





யயாதி மன்னரின் மகனான யது மிகச்சிறந்த தானப்பிரபு.அவரிடம் ஒருமுறை ஒருவன் தானம் பெற்றால், அதன்பின் அவன் பலருக்குத் தானம் செய்யும் அளவு செல்வந்தன் ஆகிவிடுவான்.

யது செய்த இத்தகைய தானத்தைக் கண்டு உகந்த திருமால், அந்த யதுவின் குலத்தில் யாதவனாக – கண்ணனாக – அவதரித்தார்.

பூமியின் பாரத்தைப் போக்க வேண்டும் என்று திருமாலிடம் தேவர்கள் பிரார்த்தனை செய்தார்கள்.

அவர்களுடன் பூமாதேவி ஒரு பசுவின் வடிவில் சென்று தன்னைக் காக்குமாறு திருமாலிடம் வேண்டினாள்.

பசுவடிவில் வந்து தன்னை வணங்கிய பூமியைக் காப்பதற்காகவே தனது அவதாரம் என்று உணர்த்தவே, ஆயர்பாடியில் பசுக்களை மேய்த்தான் கண்ணன்.

தேவர்களும் பூமிதேவியும் இவ்வாறு பிரார்த்தித்த போது, திருமால் தன் திருமேனியில்இருந்து வெள்ளை நிற ஒளியையும், கறுப்பு நிற ஒளியையும் பூமிக்கு அனுப்பினார். வெண்ணிற ஒளி பலராம னாகவும், கருநிற ஒளி கண்ணனாகவும் உருவானது.

தேவகி கம்சனுக்கு உடன்பிறந்த சகோதரி அல்லள். தேவகியின் தந்தை தேவசேனரும், கம்சனின் தந்தை உக்ரசேனரும் சகோதரர்கள் ஆவர்.

வசுதேவருக்குத் தேவகி எட்டாவது மனைவி ஆவாள்.

இரணியனுக்குக் காலநேமி என்றொரு சகோதரன் இருந்தான். அந்தக் காலநேமி தான் கம்சனாகப் பிறந்தான். இரணியன் சிசுபாலனாகவும், இரணியாட்சன் தந்தவக்ரனாகவும் பிறந்தார்கள் என்பதும் வரலாறு.

காலநேமியின் ஆறு மகன்களும் பிரகலாதனோடு சேர்ந்து நாராயண நாமத்தைப் பாடி வந்தார்கள். “உங்கள் தந்தை கையாலேயே

நீங்கள் இறப்பீர்களாக!” என்று அந்த அறு வரையும் சபித்தான் இரணியன்.

ஆனால் காலநேமி அவர்களைக் கொல்ல வில்லை.

அந்த அறுவரும் தமது அடுத்த பிறவியில், வசுதேவர்தேவகியின் முதல் ஆறு குழந்தைகளாக வந்து பிறந்தார்கள்.

காலநேமியின் மறுபிறப்பான கம்சன் தன் கையால் அவர்களைக் கொன்றான்.

அதனால் அவர்களுக்கு மீதமிருந்த காலநேமி கையால் இறக்க வேண்டும் என்ற கர்மா தீர்ந்து அந்த ஆறு பிள்ளைகளும் முக்தி அடைந்தார்கள்.

தேவகியின் கருவில் ஏழாவது கருவாக இருந்த பலராமனுக்கு ஏழு மாதங்கள் நிறைவடைந்த நிலையில், திருமாலின் ஆலோசனைப்படி துர்க்கா தேவி, ஆயர்பாடியில் இருந்த வசுதேவரின் மற்றொரு மனைவியான ரோகிணியின் கருவுக்கு அக்குழந்தையை இழுத்துச் சென்று மாற்றினாள்.

கருவிலேயே இழுத்துச் செல்லப்பட்டதால், பலராமனுக்கு சங்கர்ஷணன் என்ற பெயர் உண்டானது.

கரு சிதைந்துவிட்டதாகக் கம்சனிடம் செய்தி சொல்லப்பட்டது.

ஆவணி ரோகிணி அஷ்டமி திருநாளில் நள்ளிரவில் மதுராவில் கண்ணன் அவதரித்தான்.

அதே நேரத்தில் ஆயர்பாடியில் யசோதையின் மகளாகத் துர்க்கா தேவி தோன்றினாள்.

அந்த துர்க்கை அனைவரையும் தூக்கத்தில் ஆழ்த்தி விட்டாள்.

எனவே அந்த இரவில் மொத்தம் நால்வர் மட்டுமே விழித்திருந்தார்கள் – கண்ணன், துர்க்கை, வசுதேவர், தேவகி. யசோதைக்குப் பிரசவம் பார்த்த செவிலி கூட ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்று அறிவதற்கு முன் தூங்கி விட்டாள்.

அவதாரம் செய்யும் போது நான்கு கரங்களோடு, சங்கு சக்கரங்களோடு தோன்றினான் கண்ணன்.

ஆனால் இத்தகைய கோலத்தில் கண்ணன் இருந்தால், தன்னைக் கொல்லவந்த நாராயணனே கண்ணன் என்று கம்சன் அறிந்து கொள்வான் என்று தேவகி அஞ்சினாள்.

அதனால் தாயின் சொல்லுக்கு மதிப்பளித்து, தனது இரண்டு கூடுதல் கரங்களையும், சங்கு சக்கரங்களையும் உடனே கண்ணன் மறைத்துக் கொண்டான்.

கண்ணனை அழிப்பதற்காகக் கம்சனால் அனுப்பப்பட்ட பேய்ச்சி பூதனை, அவள் தான் கம்சனின் வளர்ப்புத்தாய் ஆவாள்.

பூதனை விஷப்பாலைக் கண்ணனுக்குக்



கொடுத்தாலும், அதைக் கண்ணனுக்கென்றே முழு மனதோடு அர்ப்பணித்து விட்டாளல்லவா.

எனவே அதையும் கூடத் தனக்கு அர்ப்பணிக்கப்பட்ட பிரசாதமாக எண்ணிப் பூதனைக்கு முக்தி அளித்தான் கண்ணன்.

சகடாசுரன் என்ற அசுரன் கண்ணனை அழிப்பதற்காக மாட்டு வண்டிச் சக்கர வடிவில் வந்தான்.

தொட்டிலில் கிடந்த படி மாட்டு வண்டிச் சக்கரத்தைக் கண்ணன் உதைத்தான்.

கண்ணனின் திருவடி பட்டதால், சகடாசுரன் அக்கணமே முக்தியடைந்து வைகுண்டத்தைச் சென்றடைந்தான்.

யசோதை கண்ணனை உரலோடு கட்டினாள் என்பதை நாம் அறிவோம்.

தாமம் என்றால் கயிறு, உதரம் என்றால் வயிறு. வயிற்றில் கயிற்றால் கட்டப்பட்டதால் கண்ணனுக்கு தாமோதரன் என்று பெயர்.

கண்ணன் கோவர்த்தன மலையைத் தாங்கிப் பிடித்ததைக் கண்ட ஆயர்கள், “நீ தேவனா, யட்சனா, கந்தருவனா, சித்தனா, சாரணனா, கிம்புருஷனா, வித்யாதரனா, அசுரனா, ராட்சசனா?” என்றெல்லாம் அவனைப் பார்த்துக் கேட்டார்கள்.

“ஏன் எனது தரத்தைக் கீழே இறக்கி விட்டீர்கள்? நான் தேவாதி தேவனான திருமால்!” என்று இங்கே கண்ணன் பதில் சொல்லி இருக்கலாம்.



ஆனால் எளிமையோடு, “என்னை அப்படியெல்லாம் உயர்த்திப் பேசாதீர்கள்! நான் உங்களில் ஒருவன்!” என்று விடையளித்தான் கண்ணன்.

கோவர்த்தன மலையைத் தாங்கிப் பிடித்துப் பசுக்களைக் காத்தபடியால், கண்ணனுக்குக் கோவிந்தன் – பசுக்களைக் காத்தவன் என்ற திருப்பெயர் உண்டானது.

யசோதையின் அண்ணன் கும்பனின் மகளான நப்பின்னையை மணப்பதற்காக ஏழு காளைகளை அடக்கினான் கண்ணன்.

ராதையும் கண்ணனும் இறுதி வரை காதலர்களாகவே இருந்தார்கள்.

திருமணம் நடைபெறவில்லை.

இறைவன் மீது கொண்ட அன்பின் உச்சமாக, தெய்வீகக் காதலின் வடிவமாகவே இன்றும் ராதை பார்க்கப்படுகிறாள்.

பலராமனோடு மதுராவில் நடந்த வில் விழாவுக்கு வந்த கண்ணன், அங்கே உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த கம்சனைப் பிடித்து இழுத்தான்.

இத்தனை நாட்களும் எந்தக் கண்ணனை எண்ணிக் கம்சன் அஞ்சிக் கொண்டிருந்தானோ, அந்தக் கண்ணனே இப்போது நேரில் வந்து விட்டான் அல்லவா?

எனவே கண்ணனைக் கண்ட அதிர்ச்சியில் கம்சன் அப்படியே மாண்டு விட்டான். கண்ணன் தனியாகக் கம்சனைத் தாக்கவில்லை.

கம்ச வதம் ஆனபின், தன் தாய் தேவகியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு மறைத்து வைத்திருந்த தனது இரண்டு கூடுதல் கைகளையும் சங்கு சக்கரங்களையும் வெளிக்கொணர்ந்தான் கண்ணன்.

அதன்பின் கிருஷ்ணாவதாரம் முழுவதும் நான்கு கைகளோடும் சங்கு சக்கரங்களோடும் தான் கண்ணன் திகழ்ந்தான்.

இதைக் கீதா பாஷ்யத்தில் ராமாநுஜரும், யாதவாப்யுதயத்தில் வேதாந்த தேசிகனும் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

தாய் தந்தையரான தேவகி வசுதேவரைச் சிறையில் இருந்து விடுவித்த கண்ணன், “ஒரு பிறவியில் பெற்றோர்கள் செய்த உதவிக்கு நூறு பிறவிகள் உழைத்தாலும் கைம்மாறு செய்ய முடியாது! இவ்வாறிருக்க நான் உங்களைப் பிரிந்து பத்து வருடங்கள் இருக்க நேர்ந்ததே!” என வருந்தினான்.

கண்ணன் யசோதைக்குச் செய்து காட்டிய பால லீலைகளைத் தேவகி காண நினைத்தாள்.

எனவே தேவகிக்காக மீண்டும் ஒருமுறை அவளது மனத்திரையில் அத்தனை லீலைகளையும் காட்டினான் கண்ணன்.

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில் புத்தகத்தில் (e-book) வெளியிட்டு வருகிறோம்...

free

இதுவரை வெளிவந்த

**145** க்கும் மேற்பட்ட இதழ்களை

**aanmeegamalar.**

இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்.



# சக மனிதனாகத்தான் கடவுள் வருவான்



முக்காலமும் உணர்ந்த துறவி அவர். கடவுளைத் தொடர்ந்துதியானித்த தால், பெரும் வலிமை பெற்றிருந்தார். அவர் உருகித் தியானித்தால், கடவுளே நேரில் வந்து நிற்குமளவு சக்தி படைத்தவர்.

ஆற்றங்கரையோரம் ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்தார். அவர் மேல் சுற்றுப்பட்டு கிராம மக்கள் மிகுந்த பாசத்துடன் இருந்தனர். சாமியின் வரவால், கிராமமே செழிப்பாக இருக்கிறது என்பது அவர்களின் நம்பிக்கை.

ஒருநாள், அவர் நித்திரையில் இருந்தபோது, ஆசிரமக் கதவு தடதடவென தட்டப்பட்டது. நித்திரை கலைந்த கோபத்தில் கதவைத் திறந்தவர், ஒரு மாடு மேய்ப்பவன் நின்று கொண்டிருந்ததைப் பார்த்தார்.

"என்ன சங்கதி?" என்றார்.

"சாமீ ஆத்துல வெள்ளம் வருதுங்க! அதான் தகவல் சொல்லலாம்னு வந்தேன்!" என்றான்.

கோபத்தில் இருந்த சாமி, "அதையேன் என்னிடம் சொல்கிறாய். உனக்குப் பயமாக இருந்தால், ஓடி ஒளிந்து தப்பித்துக் கொள்" என்று சொன்னபடி கதவைச் சாத்திவிட்டு நித்திரையைத் தொடர்ந்தார்.

சிறிது நேரத்தில் படுக்கைஈரமா னது. கண்ணைத் திறந்த துறவி, ஆசிரமத்தின் நீர்புகுந்திருப் பதைக் கண்ணுற்று எழுந்து உட்கார்ந்தார் நீரின் வேகம் அதிகரித்தது.

நீரின் வேகத்தில் ஆசிரமத்தின் மண் சுவர் கள் ஆட்டம் கண்டு விழ ஆரம்பித்தன. எழுந்து நின்ற துறவியின் மார்பளவு நீர் சூழ்ந்தது. இறைவனை எண்ணித் தவம் செய்யலானார்.

அப்போது, பதற்றமானகுரலில் அவரை அழைத்தபடி வந்தாள் ஒரு படகோட்டி "சாமி சீக்கிரம் எறிக்கங்க அணைக்கட்டு உடைஞ்சிடுச்சாம். ஊர்ல

ஒருத்தரும் தப்பிக்க முடியாதுன்ற நிலை நீங்க எங்களுக்கு முக்கியம் ஏறிக்கங்க சாமி தப்பிக் கலாம்” என்றான்

அற்பப் பதராக அவனைப் பார்த்த துறவி, “நீ யாரடா என்னைத் தப்பிக்க வைப்பதற்கு! கடவுளின் அருள் பெற்றவன் நான் என்னைக் காக்க ஆண்டவன் இருக்கிறான்!” என்றபடி தியானத்தைத் தொடர்ந்தார்.

கழுத்தைத் தாண்டிய நீர் மூச்சை முடக்கத் தொடங்கியது. அருகில் இருந்த மரத்தின் மேல் ஏறிக் கொண்டு தியானத்தைத் தொடர்ந்தார்.

காதருகில் ராட்சத கொசுவின் ரீங்காரம் கேட்டது. கண்விழித்துப் பார்த்தார் ஒரு கயிறு தொங்கியது கயிற்றின் மறுமுனையை அண் ணாந்து பார்த்தார்.

ஒரு ஹெலிகாப்டர், ராணுவ உதவியாளர்கள்.. “கமான் கயிறைப் பிடிச்சு மேலே வாங்க” என் றார்கள் ராணுவ வீரர்கள்.

கயிறைத் தள்ளிவிட்டு கடவுளைத் தியா னிக்கத் தொடங்கினார். வெள்ளம் மேலும் அதி கரித்து, துறவியைக் கபளீகரம் செய்தது.

அவரது ஆன்மா மேலுலகம் சென்றபோது, அவர் கடும் கொந்தளிப்புடன் காணப்பட்டார்.

“எங்கேய்யா அந்தக் கடவுள் அவனை எத்தனை வருஷம் தியானிச்சிருப்பேன். நன்றி கெட்ட கடவுள்.

கடைசி நிமிடத்தில் தியானித்தும் காட்சிதந்து என்னைக் காப்பாற்றாத அவனெல்லாம் நிஜமாவே கடவுள்தானா?

நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும் படி நான்கு வார்த்தை கேட்க ணும். எங்கேய்யா அந்தாளு” என்று ஏக வசனத்தில் கொந்தளித் தார்.

எதிர்ப்பட்டார் கட வுள் வழக்கமாக ஒரு கும்பிடு போடும் துறவி, இம்முறை வணங்கவில்லை.



மாறாக, “அதான் உயிரை எடுத்துட்டியே! ஏமாத்தி கழுத்தறுத்திட்டியே” என்றார் கோபமாக.

“பக்தா! நான் உனக்கு உதவியதை மறந்து நீ இப்படி ஏசலாகாது” என்றார்.

“என்னத்த உதவியிருந்தா. நாம் ஏன் இங்கே நின்னு பேசறோம்..? என்றார் துறவி.

“என்ன பக்தா இப்படிக் கூறிவிட்டாய். மாடுமேய்ப்பவன் உன்னை எச்சரித்தானே!அவன் நான் அனுப்பியவனே! படகே இல்லாத ஊரில் ஒரு படகோட்டி வந்ததெப்படிஞ் அவனும் எனது தூதனே!

அதையெல்லாம் விடு மரத்தில் பறவை போல ஒண்டியிருந்த உன்னை; சரியாக அடையாளம் கண்டுகயிறு வீசியதே ஒரு ஹெலிகாப்டர்! அது உனக்காக மட்டுமே அனுப்பப்பட்ட கடைசி உதவி.

நான்தான் உனக்காக அனுப்பி வைத்தேன். கடவுள் மானிடர்களுக்காக எப்போதும் மேலோக காஸ்ட்யூமிலேயே வரமாட்டார். சகமனிதர்கள் மூலம்தான் வருவார்.

வாய்ப்பு தருவார். அதைப் புரிந்து கொள்ளாத நீ எப்படி முக்காலமும் உணர்ந்த துறவி என்று பெயரெடுத்தாயோ.?” என்று ஏளனமாகக் கேட்டார். நொந்து நூலான துறவி, கடவுளின் காலைப் பிடித்துக் கதறினார்.

கதையிலிருந்து வெளியே வருவோம். வாய்ப்புகளும் கடவுள் போலத்தான். பொற்காசுகள் கூரையிலிருந்து கொட்டாது.

வாயில் கதவைப் புதிய வாய்ப்புகளைத் தரும் மனிதர்கள் மூலம்தான் தட்டும். அவற்றைச் சரியாகப் புரிந்து கொண்டு பயன்படுத்திக் கொள் வதே புத்திசாலித்தனம்.

உங்களை நோக்கி வரும் ஒவ்வொரு புதிய வாய்ப்பையும் உடனடியாக நிராகரிக்காமல் ஆழ்ந்து சிந்தித்துப் பிறகு ஏற்றுக் கொள்வது பற் றித் தீர்மானியுங்கள்.

ஒரு செல்வந்தரைப் பொருத்தவரை, கதவைத் தட்டும் ஒவ்வொருவரின் முக மும் ஒரு பிளாங்க் செக் போலவே இருக்கும்.

இதில் எவ்வளவு தொகை எழுதலாம் என்பதே அவரது சிந்த னையாக இருக்கும். அதனால்தான் அவரிடம் செல்வம் சேர்கிறது என்பதை உணருங்கள்.

– ராம்குமார் சிங்காரம் எழுதிய ‘ஒரு கதை, ஒரு விதை’ என்ற நூலிலிருந்து ஒரு பகுதி!

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




ஆன்மீக e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# வாலாஜாபேட்டை ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடத்தில்
# மூன்று நாட்கள் அபிஷேகம் மற்றும் ஔஷதம் வழங்கும் விழா





உலகிலேயே சைவம், வைணவம், ஸ்ரீசாக்தம், சௌரம், கௌமாரம், காணாபத்யம் என ஷண் மதத்திற்குரிய அனைத்து தெய்வ சந்நிதிகளும், நூற்றுக்கணக்கான சித்தர் பெருமக்களும், எண் ணற்ற மகான்களும் பரிபூரணமாக பிரதிஷ்டை ஆகி இருக்கும் பீடம் ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடம் ஆகும்.

இதன் ஸ்தாபகர் மற்றும் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர்.ஸ்ரீமுரளிதரஸ்வாமி களின் ஆக்ஞைப்படி, மூன்று நாட்கள் – முத் தான அபிஷேங்களும், ஔஷதம் வழங்கும் விழா வும் நடைபெற உள்ளது.

இதன்படி வருகிற 22ம்–தேதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு, வேறு எங்கும் இல்லாத வகையில் பீடத்திலேயே நந்தியுடன்அமைந்துள்ள ஸ்ரீ மரகதாம்பிகை சமேத ஸ்ரீமரகதலிங்கேஸ் வரருக்கு, 1000 கலசங்களில் புனித நீர் கொண்டு சிறப்பு பூஜைகளுடன், கலச அபிஷேகம் ( சகஸ்ர கலசாபிஷேகம்) நடைபெறுகிறது.

வருகிற 23ம்தேதி வெள்ளிக்கிழமை ஹனுமன் ஜெயந்தியை முன்னிட்டு காலை 10 மணிக்கு 9அடி உயரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ராஜ குபேர சஞ்சீவி ஆஞ்சநேயருக்கு 1008 லிட்டர்கள் சிறப்பு பால் அபிஷேகம் நடைபெறுகிறது.

அதை தொடர்ந்து ஸ்ரீ ராஜ குபேர சஞ்சீவி ஆஞ்சநேயருக்கு 1008 வாழைப்பழங்கள், 1008 வடை, 1008 ஜாங்கிரிகள், 1008 வெற்றிலை, 1008 எலுமிச்சை பழங்கள் அடங்கிய மாலைகள் அணிவிக்கப்பட்டு, துளசி மற்றும் வெண்ணெய் சாற்றி சிறப்பு அலங்காரத்துடன் பூஜைகள் நடைபெற உள்ளது.

அதே போல் வருகிற 26ம்தேதி திங்கள்கிழமை நண்பகல் 12 மணிக்கு திருவோண நட்சத் திரத்தில், மூலவர் ஸ்ரீ ஆரோக்யலஷ்மி சமேத தன்வந்திரி பெருமாளுக்கு, வேறு எங்கும் காணாத வகையில் மஹா அன்னாபிஷேகம் நடைபெறுகிறது.

மேற்கண்ட அபிஷேக பூஜைகளில், அபிஷேக தீர்த்தம், பால், அன்னாபிஷேக அன்னம் ஆகிய வை உள்பட அபிஷேக பிரசாதங்கள் ஔஷத பிரசாதங்களாக வழங்கப்பட உள்ளது.

இந்த அபிஷேக பிரசாதங்கள் பக்தர்களின் பிணிகளை தீர்க்கவல்லது எனவும், எனவே இந்த முத்தான மூன்று அபிஷேகம், பூஜைகளில் பக்தர்கள் பங்கேற்று பிரசாதங்களை ஔஷதமாக பெற்று தங்கள் நோய் மற்றும் பிணிகளைதீர்த்து பயன்பெறுமாறும், தெய்வங்களின் ஆசியும் பெற்று பயனடையுமாறு தன்வந்திரி ஆரோக்ய பீடத்தின் பீடாதிபதி யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு டாக்டர்.ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ தன்வந்திரி குடும்பத்தினர் செய்துள்ளனர்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203



# இறைவனுக்கு சமமான மரங்கள்

பத்து கிணறுகள் ஒரு குளத்திற்குச் சமம், பத்து குளங்கள் ஒரு ஏரிக்குச் சமம், பத்து ஏரிகள் ஒரு புத்திரனைத் தருவதற்குச் சமம், பத்து புத்திரர்கள் ஒரு மரத்திற்குச் சமம்,

எவர் ஒருவர் நற்கனிகள் பூத்துக் குலுங்கும் நல் மரங்களை நடுகின்றாரோ அவரிடம் தேவதைகளும் முனிவர்களும் கந்தர்வர்களும் மூன்று யுகங்களும் தங்கி அருள் புரிவர்.

'மரங்களில் நான் அரச மரமாக இருக்கிறேன்' என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கூறுகிறார்.

ஒரு அரச மரம் நட்டால் ஒரு ஆண்டு சொர்க்கலோக பதவி கிட்டும் என்று விருக்ஷ ஆயுர் வேதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதிக அளவில் ஆக்ஸிஜன் தரும் மரமாக அரச மரம் விளங்குகிறது. பிள்ளை வரம் வேண்டுவோர் அரச மரத்தைச் சுற்ற சொல்லி இருப்பதில் மருத்துவ காரணங்கள் உள்ளன.

அரச மரத்தின் அதிக பிராண வாயுவினால் சுவாசம் சுத்தமடைகிறது, அதனால் எண்ணம் சுத்தமடைகிறது, அதனால் புத்தி தெளிவாகிறது, ஞானம் பிறக்கிறது.

புத்தருக்கு ஞானம் அளித்த போதி மரம் என்பது ஒரு அரச மரமே. அதன் காரணமாகவே அரச மரத்தின் அடியில் அமர்ந்து கிராம பஞ் சாயத்துகளில் நீதி வழங்கி னார்கள்.

ஆல மரம் வாக்கின் அடையாளம். அதன் கார ணமாகவே வணிகர் ஜாதியினரான பனியாக்கள் அதன் அடியில் கூடி தங்கள் வணிகத்தை நடத்தினார்கள். அதன் காரணமாகவே

அது ஆங்கிலத்தில் பான்யன் ட்ரீ என்று அழைக்கப் பட்டிருக்கிறது. ஆல மரம் மேகங்களை ஈர்த்து அதிக மழையை தருவிக்கக் கூடியவை, அதனால் ஆல மரங்களை நிறைய வளர்க்க வேண்டும்.

சாஸ்திர முறைப்படி இரண்டு ஆல மரங்களை நடுபவர்களுக்கு கைலாயத்தில் ஒரு இடமும் கூடவே கந்தர்வ கன்னியரும் கிடைப்பார்கள் என்றும் விருக்ஷ ஆயுர்வேதம் நூல் சொல்கிறது.

மேகங்களை இழுக்கும் சக்தியுள்ள இன்னொரு மரமாக இலுப்பை மரத்தையும் அது ஆலையில்லா ஊருக்குச் சர்க்கரையானது.

தமிழ் நாட்டில் அருகி வரும் இந்த இலுப்பை மரம் அவசரமாக மிக அதிக அளவில் மீண்டும் வளர்க்கப் பட வேண்டியதன் அவசியம் இலுப்பை மரத்தின் மகிமைகளைப் படிக்கும் பொழுது புரி கிறது.

அரசு ஆண் மலடை நீக்கும் வல்லமை உடையதினாலும் வேம்பு பெண் மலடை நீக்கும் வன்மையுள்ளது என்பதினாலும் அரசுக்கும் வேம்புக்கும் திருமணம் செய்யும் ஃபெர்டிலிடி ரைட்ஸ் உருவானது.

நூறு ஆண்டுகள் வாழ்வதற்கு வேப்ப மரப் பட்டையின் கஷாயம் அருந்த வேண்டும்.

நெட்டிலிங்க மரங்களே தமிழ் நாட்டில் அசோக மரங்களாக கருதப்படுகின்றன.

ஒரு அரசு, ஒரு வேம்பு, ஒரு ஆல், பத்து புளி, முக்கூட்டாக வில்வம், விளா, நெல்லி அருகருகே நட்டுக் கூடவே ஐந்து மாமரங்களையும் நடுவோர் நரகத்துக்குப் போக மாட்டார்கள் என்று விருக்ஷ ஆயுர்வேதம் கூறுகிறது.

நாம் அதிகம் அறிந்திராத கண்டிராத மரங்களான மருதம், சேராங்கொட்டை,செம்மந்தாரை, தான்றி மரம், வெப்பாலை, வன்னி, வாதநாராய ணம், கடம்பு, புன்னை, நொச்சி, வேள்வேல், தழுதாழை, ஆனைப்புளி, பதிமுகம், மகோகனி, சிறுநாகப்பூ, தோத்தாங்கொட்டை, எட்டி, இயல்வாகை ஆகிய அரிய வகை மரங்களின் மருத்துவ, சுற்றுச் சூழல் முக்கியத் துவங்களை அறிந்து நாம் அவற்றை அதிக அளவில் வளர்த்து மீட்டெடுக்க வேண்டும்.

காக்கும் கடவுளான மகா விஷ்ணுவை வணங்கும் பக்தர்கள் அனைவரும், அரசமரத்தை வணங்குவதுடன், முடிந்த அளவு அரசமரத்தை நட்டுவைத்து அதை பராமரித்தாலே மகாவிஷ்ணுவின் கடாட்சம் கிடைக்கும்.

'மரங்களில் நான் அரச மரமாக இருக்கிறேன்' என்று பகவானே கூறியுள்ளதால், மகாவிஷ்ணுவுக்கு சமமான அரசமரத்தை போற்றுவோம்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# குருவிடம் பழக வேண்டிய முறை பற்றி
# “ஆபஸ்தம்ப ரிஷி”



- குருவுக்கு முன் கால் நீட்ட கூடாது.
- குரு நடந்தால், அவருக்கு பின்னால் நடக்க வேண்டும். குரு ஓடினால், அவரை தொடர்ந்து ஓட வேண்டும்
- குருவை சந்திக்கும் போது, காலில் செருப் போ, தலைப்பாகை வைத்து கொண்டு போக கூடாது.
- ஆனால், பயணத்திலோ, வேலையிலோ இருக் கும் போது, குருவை சந்திக்க நேர்ந்தால், தவறில்லை.
- குருவுக்கு மிக அருகில் அமர கூடாது
- குருவை அணுகும் போது, தெய்வத்தை அணுகுவது போல அணுக வேண்டும். பிரயோஜனமற்ற பேச்சுக்கள், கதைகள் பேசவே கூடாது. அவர்கள் சொல்வதை கவனத்துடன், பணிவுடன் கேட்க வேண்டும்.
- குருவுக்கு முன், ஒரு கால் மேல் போட்டு கொண்டு அமர கூடாது.
- காற்று நம் மீது பட்ட பிறகு அவர் மீது படும் படி இருக்க கூடாது. உடனேயே அந்த இடத்தை விட்டு நகர்ந்து வேறு இடமாக பார்த்து அமர வேண்டும்.
- குருவுக்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் போது, கையை ஊன்றிக்கொண்டு இருக்க கூடாது.
- குருவுக்கு முன்னால் உட்கார்ந்திருக்கும் போது, எதிலும் சாய்ந்து கொண்டு இருக்க கூடாது.
- குருவின் முகம் பார்த்து இருக்க வேண்டும். ஆனால், அதே சமயம் குருவின் முகத்துக்கு எதிரே இருக்க கூடாது.
- குருவுக்கு மிக அருகிலோ, மிகவும் தூரத்திலோ அமர கூடாது. குரு கையை உயர்த்தி கூப்பிடும் தூரத்தில் அமர வேண்டும்.



- குருவுக்கு முன்னால் பலர் இருந்தால், அவரவர் சௌகர்யத்துக்கு அமர்ந்து கொள்ள லாம்.
- குரு நிற்கும் போது, அமர்ந்து இருக்க கூடாது. குருவுக்கு அமர இடம் இல்லாத சமயத்தில், தனக்கு இடம் கிடைத்தாலும் அமர கூடாது.
- குரு ஏதாவது காரியத்தைச் செய்ய முனையும் போது, சிஷ்யனின் அனுமதியைப் பொறுத்து, தன்னால் முடிந்த வரை உதவி செய்யலாம்.
- குரு இருக்கும் போது, அவருக்கு கீழ் உள்ள எவருக்கும் (பெரியோர்கள் ஆனாலும், தகப்பனே ஆனாலும்) காலில் விழ கூடாது
- தன் கோத்திர பெருமையை குருவுக்கு முன் பேச கூடாது.
- தன் குருவை தவிர அவரை விட தாழ்ந்த தகுதி உள்ள குருவை சந்திக்க கூடாது, அல்லது அவர்களை தன் குருவுக்கு இணையாக உயர்த்த கூடாது. குருவின் குருவே வந்தாலும் சரி. இது தன் குருவுக்கு அவமதிப்பு செய்தது. தேவைப்பட்டால், அமைதியாக அந்த இடத்தை விட்டு அப்போதைக்கு நகர்ந்து விடலாம். அல்லது, தன் குருவுக்கு மரியாதை கொடுக்கலாம்.
- வாயை திறந்து கொட்டாவி விட கூடாது. அப்படி நேர்ந்தாலும் குனிந்து, வாயை கையால் மூடிக்கொள்ள வேண்டும்
- குருவுக்கு கொடுத்ததை பெருமை பேசி கொள்ள கூடாது. குருவுக்கு செய்த சம்பாவனையை மறந்து விடுவது நல்லது.
- குரு அமர்ந்த ஆசனத்தில் அமர கூடாது
- குரு கூப்பிடாமல், நல்ல விஷயத்தைத் தவிர மற்ற எதுவும் அவரிடம் சென்று பேசக் கூடாது
- குருவிடம் உபதேசம் பெற்று, வீடு திரும்பினாலும், அவரிடம் பழகும் விதம் கடைசி மூச்சு வரை கடைபிடிக்க வேண்டும்.
- குரு ஒரே ஊரில் இருந்தால், அவர் கூப்பிடமலேயே காலையும் மாலையும் அவரைப் பார்க்க வேண்டும்.
- குரு வேறு ஊரில் இருந்தால், முடிந்தவரை அடிக்கடி அவரை பார்க்க செல்ல வேண்டும்.


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்

# மனித உடலும் சூட்சும ரகசியமும்



- நமது மனம் எங்கு உள்ளது என்று தெரியுமா? நாம் எதை நினைக்கிறோமோ அங்கு நமது மனம் செல்கிறது; அதற்கு தூரம் தடை இல்லை.
- நாம் தீயவர்களை நினைக்கும்போது நமது சூட்சும சக்தி அவர்களுடன் இணைந்து நமது வலிமை குறைகிறது. இறைவனை எண்ணும்போது சூட்சும சக்தி வலிமை பெற்று நம்மை காக்கிறது.
- நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்லுக்கும், சுய உணர்வு உள்ளது.
- நிலப்பிராண சக்தி உடலுக்கு உறுதியை தருகிறது.
- ஒவ்வொரு மனிதனுக்கும் சூட்சும சரீரம் உண்டு. இதுவே ஒளி உடல் எனப்படும்.
- சுகமும் நோயும் வலியும் உணர்வும் நமது பிராண உடலால் உணரப்படுகிறது.
- மகான்கள், சித்தர்களைச் சுற்றி ஒளி உடல் பல நூறு அடிகளுக்கு பரவி இருக்கும்.
- பல்வேறு நோய்களின் பதிவுகள் மனோ சரீரத்தில் பதிவாகி உள்ளது.
- சிலர் கைகளில் உள்ள பிராணசக்தி, அவர்கள் சமையல் செய்வது மூலமாக ருசியாக வெளிப்படுகிறது.
- மருந்தின்றி மாத்திரையின்றி உடல் நோய்களை பிராணசரீரம் குணப்படுத்துகிறது.
- மனிதனின் உள்ளுணர்வு மிகப்பெரிய வழிகாட்டி.
- மனிதன் என்பது, அவன் உடல் மட்டுமல்ல. அவனின் சூட்சுமசக்தி காந்தசக்தி போல அவனைச் சுற்றி பாதுகாத்து வருகிறது .
- கோவில்களில், சித்தர் சமாதிகளில் மனித ஜிவனுக்கு ஜீவ சக்தி கிடைக்கிறது.
- மயக்கம் என்பது பௌதீக உடலுக்கும் சூட்சும உடலுக்கும் உள்ள தொடர்பின் பாதிப்பே ஆகும்.
- சிறுவர் சிறுமியர்களின் அருகில் இருப்பது, பெரியவர்களின் உடலில் இளமை சக்தி ஒட்டம் பெறுகும்.
- நோயாளிகளிடம் அதிகம் பேசுவதால் பிராண சக்தி விரயம் ஆகும்.
- மனதாலும் உடலாலும், இயற்கையை விட்டு விலகும் போது, தீராத களைப்பு ஏற்படும்.
- மனிதன் தலைகீழாக வளரும் மரம். மூளை

என்ற வேர் அனைத்தும் தலையில் தான் உள்ளது.

- நமது உடலின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் ஒருவித மொழியில் நம்முடன் பேசுகிறது.
- ஒரு மனிதனை புண்படச் செய்வது நூதனமான கொலைக்கு சமம்.
- மனிதனை தவிர மற்ற இனங்கள் சூட்சும உணர்வு மூலமே எதையும் அணுகுகிறது.
- நாம் விஞ்ஞான அறிவை மட்டும் பயன்படுத்தினால், மெய்ஞான அறிவை இழந்து விடுவோம்.
- நமது வீட்டில் பஞ்ச பூத பிராணசக்தி அனைத்து அறைகளிலும் ஓடிக்கொண்டிருக்க வேண்டும்.
- வலி என்பது உடலின் மொழி.அதை ஒரு போதும் மாத்திரையால் அமுக்க கூடாது.
- நிகழ்கால உணர்வுடன் இருக்க பழகுங்கள்.
- வலியை ஏற்று கொண்டு அதன் மூலத்தை ஆராய்ச்சி செய்யுங்கள்.
- உடலின் உறுப்புக்கள் அனைத்தும் மனதுடன் சேர்ந்து இயங்குவதே ஆரோக்கியம். மனது நோயுற்ற பின்னரே உடல் நோயுறுகிறது.
- விவசாய நிலத்தில் தாயின் கருவறையில் உள்ளதை போன்ற பிராணசக்தி உள்ளது.
- நிற்கும் தண்ணீரில் பிராணசக்தி குறைவாகவும், அசையும் தண்ணீரில் அதிகமாகவும் உள்ளது.
- நம் உடலில் எங்கெல்லாம் புதிய தண்ணீர் நுழைகிறதோ அங்கெல்லாம் காற்று பிராண சக்தி நுழைகிறது.
- தென்றல் காற்றில் பிராணசக்தி உள்ளது.
- அருவி நீரில் அதிக பிராணசக்தி உள்ளது.
- கடல்நீர் நம்முடைய பாவ தீய கர்ம வினைகளை உள்வாங்க கூடிய ஆற்றல் உள்ளது.
- உப்பு நீர் தெளித்து கழுவினால், சூட்சும தீய சக்திகள் நீங்கும்.
- கர்ப்பம் கொண்ட பெண் தீய எண்ணம் கொண்டவர்கள் பார்வையின் முன்னே செல்ல, பேச, தொடவோ கூடாது.
- மலர்ந்த முகத்துடன் மற்றவர்களை அணுகும் போது நமது சூட்சும சரீரத்தின் கவசம் பலம் பெறுகிறது.
- செயல்குறைந்த உடல் உறுப்பை, அன்புடன் உணர்ந்தால் சக்தி பெற துவங்குகிறது.
- ஒரு நாளில் சில நிமிடங்களாவது, வெட்ட வெளியில் செருப்பின்றி நடக்கவும்.
- பிறந்த குழந்தையும், நீடித்த நோயாளியும் ஒரே அறையில் தூங்குவது நல்லதல்ல.
- சூரிய ஒளியில் காயவைத்த துணி, பிராண உடலில் உள்ள பிராண ஒட்டுண்ணிகளை அழிக்கிறது.
- மனது மாயையில் விழுகிறது. சூட்சுமசரீரமோ எப்போதும் விழிப்புணர்வோடு உள்ளது.
- மனித உடல் இறப்பதற்கு முன், அவனது பிராண சரீரம் இறக்க துவங்குகிறது.
- தீட்சண்யமான தீய பார்வை கர்ப்ப சிதைவை ஏற்படுத்தும்.
- நாம் பயன்படுத்தும் பொருள்களில், நமது எண்ண பதிவு ஏற்படுகிறது.
- நாம் தும்மும் போது, அதன் அதிர்வு, தாயின் நாபிச்சக்கரத்தை சென்று தாக்குகிறது.
- தொடர்ந்த ஒரே எண்ணம், செயல் வடிவம் பெறும்.
- தீய எண்ணங்கள் தீய நீரை உடலில் சுரக்க செய்கிறது.
- பிராண சக்தி இல்லா உணவு, உடலுக்கு சுமையே.
- போதை பொருள், நரம்பு மண்டலத்தை அழிக்கும்.
- தீயவர்களை சூழ்ந்து தீய எண்ணமும், நல்லவர்களை சூழ்ந்து நல்ல எண்ணமும் இருக்கும்.
- தூக்கம் என்பது, விழிப்புணர்வு அற்ற தியானம். தியானம் என்பது, விழிப்பணர்வுடன் கூடிய தூக்கம்.

ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
இணையதளத்தில் ஆன்மிக செய்திகளை படிக்க அருகே உள்ள ஸ்கேனரை கிளிக் செய்து
Scan to Read- aanmeegamalar Website
அற்புதமான ஆன்மிக செய்திகளை படித்து மகிழுங்கள்

# வெள்ளை எள் உருவான வரலாறு



"ஒரு குறிப்பிட்ட யுகத்தில் மைத்ரேயி, கார்க்கி, அனுசுயா போன்ற உத்தமப் பத்தினிகள் பெண்களுக்கு உரித்தான வேதங்களைப் புகட்டி வேத தர்மத்தினை நிலைபெறச் செய்தனர். அக்கால கட்டத்தில் எல்லாத் துறைகளிலும் பெண்களே சிறந்து விளங்கினர். அந்த அபூர்வமான யுகத்தில் ஓர் அற்புதமான புராண சம்பவமும் நடந்தது."

சூரிய பகவானின் மைந்தர்களான சனீஸ்வர மூர்த்தியும், எமதர்ம ராஜனும் ஈஸ்வரப் பட்டம் பெற வேண்டும் என பேராவல் கொண்டு பல அரிய தவங்களை மேற்கொண்டனர். இறைவனின் திருவிளையாடலால் இருவருக்கும் இடையே ஏற்பட்ட பிணக்கில் எம தர்மராஜன் தமது தண்டால் அடித்துவிட சனீஸ்வர மூர்த்தியின் கால் ஊனமானது.

ஊனமுற்ற சனீஸ்வரர் அதுவரை தாம் மேற்கொண்ட தபோபலனைக் கொண்டு தன் காலை சரி செய்து கொள்ள முடியும். எனினும் இதுவும் இறைவனின் விருப்பமே' எனத் தெளிந்து மீண்டும் தவத்தை மேற்கொண்டார்.

அவருக்கு ஸ்ரீசிவபெருமான் தரிசனம் அளித்து 'ஸ்ரீஅம்பிகையின் அருளைப் பெற்றாலன்றி எவ்வித ஆன்மீக நிலையையும் எவருமே பெற இயலாது' என உணர்த்த, சனீஸ்வர மூர்த்தியும் பல அம்பிகைத் தலங்களுக்குச் சென்று அற்புத இறைப்பணி ஆற்றி வந்தார். மூர்த்தி தீர்த்தம் தலம் என்றவாறாக அவர் முறையாகச் செய்த தரிசனங்களின் பலனால் ஸ்ரீஅம்பிகை அவருக்குக் காட்சியளித்து "சனீஸ்வரா! ஏற்கனவே நீ நிறைய தபோபலன்களைப் பெற்று விட்டாய். மேலும் தவம் செய்வதைவிட நீ பெற்றுள்ள தவ சக்தியைக் கொண்டு அரிய இறைக் காரியங்களை நிறைவேற்றினால், தவ சக்தி பெருகுவதோடு பலன்களும் எளிதில் ஈஸ்வர அனுக்ரஹமாக மாறும்' என ஆசீர்வதித்தனள்.

மேலும், "இதற்குப் பிறகு வரும் யுகங்களில் வேத நெறிகள் மங்கி ஹோமம். வேள்வி, பூஜை முறைகள் நலிவடையும். ஜீவன்களில்

பெரும்பாலோர் பெண்களாக.இருப்பதால் சந்ததிகளின்றிப் பல குடும்பங்கள் வாடும் சூழ்நிலையில் பெண்களுடைய பித்ரு பூஜையே ஆண் பெண் ஜீவநிலையைத் தார்மீக முறையில் விகிதப்படுத்தப்படும். எனவே பித்ரு லோகங்களின் நாயகரான ஸ்ரீமகா விஷ்ணுவின் பாதங்களில் உன் தபோ சக்தியை சமர்ப்பித்து, பெண் களுக்கான பித்ரு பூஜையைப் பல லோகங்களிலும் பரப்புவாயாக!' என அருளினாள்.

ஸ்ரீபராசக்தியின் அருளாணைப்படி சனீஸ்வரர் ஸ்ரீவிஷ்ணுவின் பாதம் பணிந்தார். அடுத்த கணம் விஷ்ணு லோகத்தில் அவரை அனைத்து மகரிஷிகளும் யோகிகளும் ஆனந்தமாக வரவேற்றனர். ஊனமுற்ற தமக்கு ஸ்ரீவிஷ்ணு லோக தரிசனம் எளிதில் கிடைத்ததை எண்ணி வியந்தார் ஸ்ரீசனீஸ்வர பகவான்.

ஸ்ரீநாரத மகரிஷியும், "ஸ்ரீசனீஸ்வரா! உன்னுடைய தவ வலிமை காரணமாக விஷ்ணு லோகதரிசனம் கிட்டியது என எண்ண வேண்டாம்.

உள் தவப் பலனை ஸ்ரீமஹா விஷ்ணுவின் பாதார விந்தங்களில் சமர்ப்பிக்க வந்துள்ளாயே அந்த சரணா கதி மனப்பான்மையே கார ணம். குரு அருளால்தான் திரு அருளைப் பெறலாம். சாட்சாத் அம்பிகையே உன க்கு குருவாய் அமைந்து விஷ்ணுவின் திருஅருளைப் பெற்றுத் தந்து விட்டாள். நம்பிக்கை, சரணாகதி, தியாகம் இவையே குரு அருள் கூட்டும் முப்பெரும்நிலை!" என விளக்கினார்.

சனீஸ்வரரும் ஸ்ரீவிஷ்ணுவின் திருப் பாதங்களில் தம் தபோபலனைக் காணிக் கையாக அர்க்யம் வார்த்து அளித்திட, ஸ்ரீவிஷ்ணு ஏற்று, அந்த நீர்த்துளிகளைத் தம் இடது கண்ணில் பூசிக் கொண்டார். அந்த நீர்த்துளிகளே முதல் வெள்ளை எள் தானி யங்களாக மலர்ந்தன!

''சனீஸ்வரா! இனிவரும் காலங்களில் பெண்கள் வெள்ளை எள் கொண்டு தர்ப்பணம் செய் வார்கள். அவ்வாறு செய்யும் பெண்களுக்கு சனீஸ்வர மூர்த்தியாம் உன் அருளோடு, விஷ்ணு லோகத்தில் வசிக்கும் பித்ருக்களின் தரிசனமும், அருளாசியும் கிடைக்கும்!" என ஸ்ரீவிஷ்ணு பகவான் திருவாய் மலர்ந்தருளினார்.



"இவ்வுலகில் நடக்கும் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு காரணம் உண்டு. எம்பெருமான் இறைவனின் படைப்பில் ஒரு சிறு இலைகூட காரண, காரியமின்றி அசைவதில்லை. நடப்பது அனைத்திற்கும் பின்னால் ஒரு



காரணம் உண்டு என்ற உண்மையை மனதில் உருவேற்றி வந்தால் போதும். மனிதன் தன் வாழ்வில் அனைத்து ஏற்றத் தாழ்வுகளையும் அணுஅளவு கூட மனக்கிலேசமின்றிச் சந்திக்கலாம்."

# 12 ராசிகளுக்கான 2022 மார்கழி மாத பலன்கள்





மதுரை
மடப்புரம் விலக்கு
ஜோதிடர்
கரு. கருப்பையா
M. A. M. PHIL
PH: 95247 51504
94431 65504.

## மேஷம்



தனவரவு நன்றாக இருக்கும், வரவுகள் நன்றாக இருந்தாலும் செலவுகள் கட்டுப்படுத்துவது அவசியம், குடும்ப உறுப்பினர்களின் உறவு சிறப்பாக இருக்கும், மறைமுக எதிர்ப்புளுக்கு வாய்ப்பு உள்ளதால் சற்று ஜாக்கிரதையாக இருப்பது அவசியம், பணி செய்யும் இடத்தில் எச்சரிக்கையுடன் பணி செய்வது நல்லது.

பரிகாரம்: காலையில் கதிரவனை வழிபடுவதால் பிரச்சனைகள் தீரும்.

## ரிஷபம்



நன்மை தீமை கலந்தே இருக்கும், யாரையும் நம்பி ஏமாற வேண்டாம், மின்சாரம் நெருப்பில் கவனம் தேவை. பொருளாதாரப் பிரச்சனைகள் ஏற்படாது, தனவரவுகள் நன்றாக அமையும், பிரயாணம் செல்லும் வாய்ப்புகள் அமையும், பிள்ளைகளின் படிப்பை சிறப்பாக அமைக்க முயற்சி செய்யுங்கள்.

பரிகாரம்: தினமும் முருகப்பெருமானை வழிபாடு நன்மையாக அமையும்.

## மிதுனம்

செல்போன் பேச்சுக்களால் சிறப்புக் கூடும் அவசரஉதவிகள் கிடைக்கும் பெண்கள் வழியில் கவனம் தேவை. வரவு கூடும், ஏதோ ஒருவித பயம் மனதில் தோன்றிமறையும், பிள்ளைகள் விஷயத்தில் கவனம் தேவை, சொத்துக்கள் வாங்கும்யோகம் கைகூடும். எந்த விஷயங்களிலும் விழிப்புடன் இருப்பது அவசியம்.



பரிகாரம்: விநாயகர், சிவபெருமானை தினமும் வழிபடுங்கள் பிரச்சனைகள் தீரும்.

## கடகம்



வரவுக்கு மேலே செலவு ஏற்படவாய்ப்புள்ளது, குழந்தைகள் வளர்ப்பில் கவனம் தேவை, செல்லப்பிராணிகள் காணாமல் போகும் வாய்ப்புள்ளது. மனக்குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. சற்று முயற்சி செய்தால் வருமானம் வந்து குவியும். அதே அளவு செலவுகளும் உள்ளது.

பரிகாரம்: சிவ சக்தி வழிபாடு பலனைத் தரும்.

## சிம்மம்



செல்வாக்கு கூடும், ஆடை ஆபரணங்களின் சேர்க்கை அதிகரிக்கும் பேச்சில் கவனம் தேவை, வீண் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மற்றபடி எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிபெறும், மனோதைரியம் அதிகரிக்கும். புதிய சொத்துக்கள் வாங்கும் பாக்கியம் அமையும், அலுவலகத்தில்

அனைத்தும் நன்மையாகவே நடக்கும்.

பரிகாரம்: குபேர வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## கன்னி



கடல்சார்ந்த பொருட்களால் லாபம் கூடும். வீடு, மனை யோகம் கூடும். வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமையும். வரவுகள் அதிகரிக்கு, குடும் பத்தில் மகிழ்ச்சி பெருகும், இம்மாத பின்பகுதி மிகுந்த சிறப்பாக அமையும். அலுவலகம் சார்பில் சாதகமான நிலை ஏற்படும்

பரிகாரம்: அனுமன், பெருமாள் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## துலாம்



வெளியூர் பயணங்கள் அமையும், யாருக்கும்ஜாமீன் நிற்கவேண்டாம், சுற்றுலா செல்லும் வாய்ப்பு கிடைக் கும், செலவு கூடும், எந்த விஷயத்தையும் ஒன்றிற்கு இரண்டுமுறை யோசித்து செய்யுங்கள். பணி யிடத்தில் நன்மைகள் கிடைக்கும்.

பரிகாரம்: பெருமாள் வழிபாடு, காலபைரவர் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## விருச்சிகம்



செல்வாக்கு கூடும், மனதில் தன்னம்பிக்கை கூடும், சுபச் செலவுகள் கூடும், திருமணத் தடை நீங்கும், பொருளாதார வளர்ச்சி நன் றாக அமையும், குடும் பத்தில் சுபகாரியம் நடைபெறும் வாய்ப்பு உள்ளது. தொட்ட காரியங்கள் அனைத்தும் நல்லபடியாக முடியும், புதிய முயற்சிகளை எந்தவித தயக்கமுமின்றி செயல்படுத்த ஆரம்பிக்கலாம்.

பரிகாரம்: மலை மீதுள்ள முருகன் கோவிலுக்கு சென்று வழிபடுவது நன்மை தரும்.

## தனுசு



திடீர் பயணங்கள் அமையும், நண்பர்கள் வழியில் கவனம் தேவை, பெற்றோரின் அன் பும் ஆதரவும் தேவை, எக்காரணம் கொண்டும் தலைமை பொறுப்புக்கு முயற்சி செய்யாதீர்கள், திரு மண பாக்கியம் அமையும், வாக்குவாதங்கள் தேவையில்லை, பொது காரியங்களில் ஈடுபடுங்கள், அடுத்தவர்களைப் பற்றி அதிகம் சிந்திக்காதீர்கள், முடிந்த அளவு மனதை அமைதியாக வைத்திருக்க முயற்சி செய்யுங்கள்.

பரிகாரம்: துர்க்கை அம்மன், அனுமன் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## மகரம்



பிள்ளைகளால் பெருமை கூடும், கடல் சார்ந்தபொருட் களால் லாபம் கூடும், மனைவி வழியில் மகிழ்ச்சி யான செய்திகள் வரும், பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்படும், பணவரவு, செலவில் சிக் கல்கள் ஏற்படவாய்ப்புள்ளது. இடமாற்றம், தொழில் மாற்றம் போன்றவை ஏற்பட வாய்ப்புள்ளது, எந்த விஷயமாக இருந்தாலும் சற்று விட்டுக் கொடுத்து சென்றால் பிரச்சனை பெரிதாக அண் டாது.

பரிகாரம்: முத்துமாரியம்மன், பெருமாள் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## கும்பம்



குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், உடல் நலன் பேணவும், உணவு கட்டுப்பாடு அவசியம், ஆன்மிகத்தில் நாட்டம் அதி கரிக்கும். உடல் நலத்தில் சற்று கவனம் தேவை, எலும்பு மற்றும் நரம்பு சம்பந் தப்பட்ட பிரச்சனைகள் ஏற் பட வாய்ப்புள்ளது. உறவி னர்கள், நண்பர்களின் உதவி கிடைக்கும், ஆடை ஆபரண சேர்க் கை பெருகும்.

பரிகாரம்: காளிதேவி வழிபாடு, ஆஞ்சநேயர் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

## மீனம்



கடன்சுமை குறைந்து கவலைகளும் குறையும், கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை, நீண்டநாட்களாக பார்க்காத வர்களை திடீரென சந்திக்கும் நிகழ்வுகள் நடைபெறும். குருபகவானின் பூரண அருள் இருப்பதால், மகிழ்ச்சி நிலவும், புத்துணர்ச்சியாக காணப்படுவீர்கள், சொத்து, நிலம் வாங்கல் சிறப்பாக இருக்கும், தொழிலில் வளர்ச்சி கிடைக்கும். ஆடை ஆபரணங்களின் சேர்க்கை அதிகமாக இருக்கும்..

பரிகாரம்: குருபகவான் வழிபாடு மேற்கொள்வது நன்மை தரும்.

# தோல்நோய்களை போக்கும் குருவாயூரப்பனின் வாகைசாத்து



கேரள மாநிலம், குருவாயூரிலுள்ள ஸ்ரீ குருவாயூரப்பன் ஆலயத்தில், காலை 3.00 மணிக்கு நிர்மால்ய தரிசனம் காண பக்தர்கள் காத்துக் கிடப்பார்கள்.

ஆலயக் கதவு திறந்தவுடன் பக்தர்கள் அனைவரும் முண்டியடித்துக் கொண்டு, "அம்மே நாராயணா!' கிருஷ்ணா! குருவாயூரப்பா!' என்று அழைத்துக் கொண்டு திருச்சந்நிதி நோக்கி ஓடுவார்கள்.

அங்கு ஸ்ரீ குருவாயூரப்பன் முதல் நாள் இரவு சார்த்தப்பட்ட சந்தனக் காப்பு, ஆடை, ஆபரணங்களுடன் குழந்தைக் கண்ணனாகக் காட்சி தந்து பக்தர்களை மெய்சிலிர்க்க வைப்பான்.

ஓரிரு நிமிடங்களில் அவனது அலங்காரம் களையப்பட்டு, உடனடியாக தைலாபிஷேகம் நடைபெறும்.

தைலாபிஷேகம் செய்தவுடன்வாகை மரத்தின் பட்டையை இடித்துத் தயாரிக்கப்படும் பொடியை குருவாயூரப்பனின் திருமேனியில் போட்டு எண்ணெய் போகத் தேய்க்கிறார்கள். இதைத் தான் வாகை சார்த்து என்கிறார்கள்.

அதன்பின் தங்கக் குடத்திலிருக்கும் புனித நீரால் திருமுழுக்காட்டுகின்றனர்.

அதன்பின் அலங்காரம் செய்யப்படுகிறது.

திருமுடியில் மயில்பீலி அணிந்து, கையில் வெண்ணெய் ஏந்தி, சிறிய சிவப்பு நிற கோவணம் (கௌபீனம்) தரித்து, புல்லாங்குழலுடன் பாலகோபாலனாக ஸ்ரீ குருவாயூரப்பன் பக்தர்களுக் குத் தரிசனம் தந்து அருள்பாலிக்கிறான்.

இந்த அபிஷேகத் தீர்த்தமும் தைலமும் பல நோய்களைக் குணப்படுத்தும் சக்தி பெற்றவை என பக்தர்கள் நம்புகின்றனர்.

இந்த வாகை சார்த்து வழிபாடு பற்றி ஒரு கதை கூறப்படுகிறது.

ஒரு காலத்தில், தாய் தந்தை யாருமின்றி ஆதரவற்ற நிலையில் இருந்த காஷு என்ற பத்து வயது சிறுவன் தொடர்ந்தாற்போல் மூன்று தினங்கள் உணவில்லாமல் இருக்க நேரிட்டதாம்.

பசியின் கொடுமையைத் தாங்கவியலாத அவன் அருகிலுள்ள நதிக்குச் சென்றுஅதில் மூழ்கி தன்னை மாய்த்துக் கொள்ளநினைத்தான்.

அப்போது நாரத முனிவர் அவன்முன் தோன்றி ஒரு பாத்திரத்தைக் கொடுத்து, அவன் விரும்பும் போதெல்லாம் அந்த அட்சய பாத்திரத்திலிருந்து உணவு கிட்டும் என்று கூறினாராம்.

அவனும் அதிலிருந்து தேவையானபோதெல் லாம் உணவை வரவழைத் துச் சாப்பிட்டு பசி யாறிக் கொண்டிருந்தான்.

இந்நிலையில் ஒருநாள் காஷுவுக்குப் பேராசை ஏற்பட்டது. மீண்டும் தான் தண்ணீரில் மூழ்குவதுபோல நடித்து, நாரத முனிவரை வரவழைத்து வீடு, செல்வம் போன்றவற்றை அடையலாம் என்று நினைத்தான்.

அதன்படி நதியில் சென்று அவன் மூழ்கிய போது நாரத முனிவரும் வரவில்லை; அட்சய பாத்திரத்தையும் காணவில்லை.

பேராசையால் தனக்கு நேர்ந்த துயரத்தை எண்ணிய காஷு, இறைவனின் புனிதப் பெயர் களை உச்சரித்து அவன் தியானத்திலேயே தனது வாழ்நாளைக் கழிக்க ஆரம்பித்தான்.

அவனது நிலையைக் கண்டு வருந்திய லட்சுமிதேவி, உடனடியாக அந்தச் சிறுவனுக்கு உதவி செய்யுமாறு பகவானிடம் வேண்ட, அவ ரும் அதற்கு இணங்கினார்.

சுயநினைவை இழந்து மயங்கிக் கிடந்த காஷுவுக்கு பகவான் காட்சி கொடுக்க, அவன் எழுந்து நின்று தன்னை அவரது திருவடிகளில் ஆட்கொள்ளுமாறு வேண்டினான்.

திருமாலும் அதை ஏற்றுக் கொண்டு, கலியுகத்தில் நீ ஒரு வாகை மரமாகப் பிறப்பாய். அப்போது நான் குருவாயூர் கோவிலில் குரு வாயூரப்பனாகக் காட்சி தருவேன்.

ஒவ்வொரு நாளும் காலையில் எனக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் முடிந்தவுடன் என்னை வாகைத் தூளினால் தேய்த்து தூய்மை செய்வார்கள்.

அந்த வகையில் நீ எனக்கு சேவை செய்வாய். இந்த வாகை சார்த்து நல்லெண்ணெய், வாகைப் பொடி அபிஷேகத் தீர்த்தம் மூலமாக ஆயிரக்கணக்கான பக்தர்களின் தோல் நோய்களும் தீரும் என்று கூறி சிறுவன் காஷு வையும் ஆசீர்வதித்து விட்டு மறைந்தார்.

இவ்வாறுதான் குருவாயூர் திருத் தலத்தில் குருவாயூரப்பனுக்கு 'வாகை சார்த்து' வழக்கம் ஏற்பட்டதாம்!!



# மனித-தேவ உருவத்தின் மிகச்சிறந்த உதாரணம்

# விக்ன விநாயகர்

**கடவுள் உருவாக்கிய மதம்**

அழகானது என்று சொல்லும் போது இறைவன் படைப்பில் உள்ள பல விஷயங்களை சொல்லலாம் அதில் ஒரு சிக்கலும் இருக்கிறது. எனக்கு அழகாக தெரிவது மற்றவருக்கு அழகாக தெரிவதில்லை மற்றவர்கள் அழகு என்று போற்றி புகழ்வதை மனம்கசிந்து ரசிப்பதை என்னால் கண்ணெடுத்து பார்க்க முடியவில்லை எனவே அழகு என்பது ஒவ்வொருவரின் மனபாங்கை பொறுத்தே அமைகிறது என்ற முடிவுக்கு வரவேண்டிய நிலை உள்ளது ஆனாலும் பொதுவான நிலையான சாஸ்தவமான அழகு என்று எதுவும் இல்லையா? என்று கேள்வி எழும்ப கூடும்.

இந்த உலகில் மட்டுமல்ல எந்த உலகிலும் நிலையான அழகு என்பது இறைவனின் அழகு மட்டுமே அவனது திருமேனியாக பறந்து விரிந்து கிடக்கும்.

இந்த பிரபஞ்சமும் இதனுள் சுற்றிகொண்டே இருக்கும் உலகமும் உலகத்தினுள்ஓங்கி உயர்ந்து நிற்கும் மலையும், கருமுகில் கூட்டமும், மரம், செடி,கொடிகளும்,நதியும், கடலும், அறுவிகளும் நிரந்தரமான அழகை வாரி வழங்கி கொண்டிருக்கிறது. என்பதில் சந்தேகமில்லை ஆனால் இந்த அழகுகளை எத்தனை பேரால் ரசிக்க முடிகிறது சிலருக்கு மலையையும், கடலையும் கண்டால் ரசனை வருகிறதோ இல்லையோ பயம் வருகிறது. சாதாரண மனித கண்களுக்கு இறைவனின் அழகும் இயற்கையின் அழகும் தெரிவதில்லை



எனவே நம்மை போன்ற சாதரண மனித ஜீவன்களுக்கு நம்மால் புரிந்து கொள்ள கூடிய நிரந்தர அழகு என்பது இல்லவே இல்லையா? என்ற சிந்தனை எழுந்து நிற்கும் நம்மை போன்ற அறிவிலிகளையும் இறைவன் கருணையோடு பார்ப்பதனால் நமக்கான தனி அழகையும் படைத்திருக்கிறான்.

அதை பற்றிய தெளிவு நம்மிடம் இல்லை என்றாலும் சொன்னால் புரிந்து கொள்ள நம்மால் இயலும் எனவே சாமான்ய அறிவு புரிந்து கொள்ளும் அழகு எது என்று

கேட்டல் எதை பார்த்தால் மீண்டும் மீண்டும் பார்க்க தோன்றுகிறதோ அதுவே மாறாத அழகு என்று அடித்து சொல்லலாம்.

மலையை பார்த்தால் மீண்டும் பார்க்க தோன்றும், ஆகாயத்தில் நகர்ந்து கொண்டிருக்கும் மேக கூட்டங்களை எத்தனை முறை பார்த்தாலும். சலிப்பதில்லை அதே போன்று ஆடி ஆடி அசைந்து வரும் யானையை கோடான கோடி முறை பார்த்தாலும். இன்னும் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் உதிக் குமே தவிர போதும் என்ற திருப்தி வராது. இப்படி மிக எளிய அழகான உருவில் வந்தால் தான் மனித மனங் களை ஆசை என்ற படுகுழியில் இருந்து தூக்கி மேலே கொண்டு வரமுடியுமென்று கருதிய இறைவன் ஆணைமுகத்தானாக அவதாரம் செய்தது தான் விநாயகர் பெருமானாகும்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு




ஆணை முகம் கொண்ட விநாயகர் பெரு மானின் திருவுருவத்தை அமர்ந்த கோலத்தில் பார்த்தாலும் நின்ற கோலத்தில் கண்டு கழித்தாலும். கிடந்த கோலத்தில் தரிசனம் செய்தாலும் பிரணவ ஒலியான ஓம் என்ற அட்சரத்தின் வடிவமே தெரியும்.

சிவபெருமானின் மூத்த குமாரரான விக்னேஸ்வரன் ஓம் கார வடிவினன் என்று விநாயகர் அஷ்டோத்திர சத நாம வழியில் ஓம் ஓங்கார உருவே நம! என்று துதிக்க படுவதை இங்கு நினைவு கூற வேண்டும்.

ஓம் என்ற பிரணவ வடிவத்தில் இருந்து தான் உலகமே உருவானது என்பது இந்துக்களாகிய நம் நம்பிக்கை என்பதனால் இந்த உலகத்தை உரு வாக்கியவன் விநாயகனே என்று உறுதி மொழியும் நமது சமய ஆன்றோர்களால் தரப்படுகிறது.

கணபதியினுடைய நான்கு கை கள் மனித இயல்புக்கு அப்பாற்பட்ட வானவர் இயல்பை குறிப்பதாகும். அவருடைய தும்பிக்கை விலங்கு இயல்பையும் காட்டுகிறது. அவரது மத்தள வயிறும் குறுகிய கால்களும் பூதகணங்களின் இயல்பை நமக்கு காட்டுகிறது. அவரது திருமேனியில் உள்ள மற்ற உறுப்புகள் மானுட இயல்பையும் தந்தமோடு கூடிய அழகிய வதனம் ஆண் இயல்பையும், தந்தம் இல்லாமல் இருக்கும் வதனத்தின் மறுபக்கம் பெண் இயல்பையும் புலப்படுத்துகிறது.

அதாவது ஆணை முகம் மிருக தன்மையையும் மற்ற உறுப்புகள் மனிதர் உள்ளிட்ட தேவகணங்கள் இயல்பையும் விநாயகனின் திரு மேனியில் ஒன்றாக இருப்பதை நமக்கு காட்டுகிறது. சுருங்க சொல்வது என்றால் அவரதுசதுர் கரமும் தும்பிக்கையுடன் கூடிய பஞ்சகரமான ஐங்கரமும் உலகின் உள்ள பஞ்ச பூதங்கள் அனைத்தும் இறைவ னுக்குள் அடக்கம் என்பதை சொல்லாமல் சொல்கிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்:
09442426434



# மார்கழி திருவாதிரையும் சிறப்பு வாய்ந்த திருஉத்திரகோசமங்கை ஆருத்ரா தரிசனமும்



தட்சிணாயனத்தின் இறுதி மாதமான மார்கழியில் திருவாதிரை நட்சத்திரத்தன்று, சிவாலயங்களில் ஆருத்ரா தரிசனம் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் செய்யப்படும் சிறப்பு அபிஷேகத்தையும், அதனைத் தொடர்ந்து தரிசனம் அளிக்கும் ஆருத்ரா காட்சியையும் காண்பது புண்ணியம் நல்கும்.

பஞ்ச சபைகள் என்றழைக்கப்படும் ஆடல் வல்லான் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவாலங்காடு (இரத்தின சபை), சிதம்பரம் (கனக சபை), மதுரை (வெள்ளி சபை), திருநெல்வேலி (தாமிரசபை), திருக்குற்றாலம் (சித்திர சபை)

ஆகிய இடங்களில் ஆருத்ரா தரிசனம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

வரும் 2023–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் திருவாதிரை நட்சத்திரம் – ஜனவரி5, 2023 (மார்கழி 20) அன்று இரவு 9:26 ஆரம்பமாகிறது.

ஜனவரி7, 2023 (மார்கழி 22) அன்று இரவு 11:28 PM திருவாதிரை நட்சத்திரம் முடிவுறுகிறது.

## மார்கழித் திருவாதிரை

தமிழில் சொல் லப்படும் திருவாதிரை என்ற நட்சத்திரத்திற்கு வடமொழியில் ஆருத்ரா என்று அழைக்கப்படுகிறது. இந்த நட்சத்திரம் ஈசனுக்கு உரியதாகப் போற்றப்படுகிறது. ஆதியும் அந்தமும் இல்லாத ஈசனுக்கு உரிய நட்சத்திரமாக திருவாதிரை எவ்வாறு உருவானது என்பதை புராணக்கதைகள் விளக்குகின்றன.

முன்னொரு காலத்தில் திரேதாயுகா என்ற இளம் பெண்ணொருத்தி இருந்தாள். அவள் அன்னை பார்வதி தேவியின் மீது அளவில்லா பற்றுக்கொண்டு வணங்கும் தீவிர பக்தையாக விளங்கினாள். இளம் பெண்ணான அவளுக்கு, வீட்டில் திருமணம் பேசி முடிவெடுத்து, ஒரு நல்ல நாளில் மணம் முடித்து அனுப்பி வைத்தனர்.

அக்காலங்களில், திருமணம் முடிந்த நான்காவது நாளில்தான், சாந்தி முகூர்த்தம் நடத்த வேண்டும் என்ற ஐதீகம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

எண்ணற்ற கனவுகளுடன் இருந்த திரேதாயுகாவின் வாழ்வில் விதி விளையாடியது. மணமான மூன்றாவது நாளில் அவளது கணவன் மரணிக்க, அலறித் துடித்தாள் அந்த அவலைப்பெண்.

அன்னை பார்வதியிடம் "உன்னையே நம்பி இருக்கும் என்னை இப்படி சோதிக்கலாமா?. பக்தியுடன் உன்னை இவ்வளவு நாட்கள் வணங்கியதற்கு இதுதான் பலனா??" என்று கண்ணீர் விட்டுக் கதறி அழுதாள்.

அபலையின் அழுகுரல் அன்னைக்கு கேட்காமலா இருக்கும். கயிலாயத்தில் இருந்த அன்னை பார்வதி, தனது பக்தையின் நிலைமையை எண்ணி வருந்தி, அவள் கணவனுக்கு உயிர் கொடுக்க சபதம் செய்தாள். இதனை ஈசனிடம் சொல்ல, உடனே அவர்கள் முன் தோன்றிய எமனுக்கு திரேதாயுகாவின் கணவருக்கு உயிரளிக்க ஆணையிட்டார் சிவபெருமான்.

உயிர்பெற்றெழுந்த கணவனுடன், திரேதாயுகா அன்னை பார்வதியின் பாதத்தில் சரணடைய, அவர்களுக்கு ஈசனும், உமையாளும் காட்சி தந்து ஆசிர்வதி ஆசீர்வதித்தார்கள். இந்த தரிசனம் மார்கழி மாத திருவாதிரையில் நடைபெற்றதால் ஆருத்ரா தரிசனம் என்றழைக்கப்பட்டது.

## சேந்தனாரும் திருவாதிரையும்

ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்சேந்தனார் என்பவர் திருவெண்காட்டிற்கு அருகில் உள்ள நாங்கூர் என்ற ஊரில் வசித்து வந்தார். இவர் பட்டினத்து அடிகளின் தலைமைக் கணக்கராக இருந்தார்.

அப்பொழுது பட்டினத்தாரின் கட்டளைப்படி கருவூலத்தை திறந்து, மக்களுக்கு தேவையானவற்றை எடுத்து செல்ல அனுமத்தித்தார். இது பற்றி பட்டினத் தாரின் உறவினர்கள் சோழமன்னனிடம் புகாரளிக்க, அவன் சேந்தனாரை சிறையில் அடைத்தான்.

பட்டினத்தார் அருளால் சிறையில் இருந்து விடுதலை பெற்ற சேந்தனார், தனது குடும்பத்துடன் தில்லையம்பதிக்கு இடம் பெயர்ந்தார். அங்கு விறகு வெட்டி விற்று, அதில் கிடைக்கும் வருமானத்தில் குடும்பத்தை நடத்தி வந்தார். அவரது சிவபக்தியை உலகிற்குக் காட்ட விரும்பினார் ஈசன். அன்றைய தினம் கடும் மழை பெய்ய, சேந்தனாரால் விறகு வெட்ட செல்ல முடியவில்லை. வருமானம் இல்லாததால், உணவு சமைக்க வழியின்றி தவித்தார்.

பின்னர் வீட்டிலிருந்த சிறு அரிசியை மாவாகத் திரித்து, அதனைக் கொண்டு களி செய்தார். செய்த களியைப் படைக்க, சிவனடியாருக்காகக் காத்திருந்தார். கொட்டித்தீர்த்த மழையால், சிவனடியார்கள் யாரும் வரவில்லை. இதனால் மனம் வருந்தி நின்ற சேந்தனார் வீட்டில், ஈசனே சிவனடியாராக மாறி "உண்ண உணவு ஏதாவது இருக் கிறதா" என்று கேட்டார்.

மகிழ்ச்சியுடன் தான் செய்த களியைஅவருக்குப் படைக்க, அதை விரும்பி உண்டார் ஈசன். பின்னர் மீதமிருந்த களியையும் அடுத்த வேளை உணவிற்காக கேட்க, அதையும் கொடுத்தார் சேந்தனார்.

அதைப் பெற்றுக்கொண்ட அங்கிருந்து மறைந்த ஈசன், மன்னரின் கனவில் தோன்றி "தான் சேந்தனார் வீட்டில் களி உண்டதைத் தெரிவித்தார். மறுநாள் காலை கருவறையை திறந்த தீட்சிதர்கள் அங்கு களி சிதறிக் கிடைப்பதை தெரிவிக்க, மன்னனுக்கு தான் இரவில் கண்ட கனவின் உண்மையை உணர்ந்தார்.



அன்றைய தினம் சிதம்பரத்தில் நடந்த தேர்த்திருவிழாவில், அரசன் உட்பட முக்கியஸ் தர்கள் பலரும் கலந்து கொண்டனர். ஈசனைத் தரிசிக்கும் ஆசையில், சேந்தனாரும் அத்தேர்திருவிழாவிற்கு வந்தார். உற்சவரின் திருமேனியைத் தேரில் வைத்து, வடம்பிடித்து தேரை நகர்த்த முற்பட்டார்கள். ஆனால் தேர் ஒரு அடிகூட நகராமல் அதே இடத்தில் நின்றது. எவ்வளவு முயன்றும் நகராததால் அரசன் மனவருந்தி நின்றான்.

"சேந்தா நீ பல்லாண்டு பாடு" என அசரீரி ஒலிக்க, இலக்கணம் அறியாத தான் எவ்வாறு பல்லாண்டு பாடுவேன் என்று ஈசனை மனதால் தொழுது வேண்டினார். அவரது வேண்டுதலுக்கு செவி சாய்த்து எம்பிரான் அருள் மழை பொழிய, “மன்னுகதில்லை” என்று தொடங்கும் பல் லாண்டை மனமுருகப் பாடத்தொடங்கினார். சேந்தனார் “பல்லாண்டு கூறுதுமே” என்று பதின்மூன்றாவது பாடலை முடிக்க தேர் அசைந்து நகரத் தொடங்கியது.

இதனால் உள்ளம் மகிழ்ந்த மன்னரும், மக்களும், அங்கிருந்த சிவனடியார்களும் சேந்தனாரின் பாதங்களில் விழுந்து வணங்கினர். மன்னரான தாம், என்போன்ற சாதாரண ஒருவனின் காலில் விழலாமா? என்று கேட்ட சேந்தனாருக்கு ஈசன் களி உண்டது பற்றி எடுத்துரைக்க, பரவசத்தில் மூழ்கினார்.

ஈசன் தரிசனம் தந்து களி உண்ட நிகழ்வு திருவாதிரையில் நடைப்பெற்றதால், அன்றி லிருந்து எம்பெருமானுக்கு களி படைப்பது வாடிக்கையானது. "திருவாதிரை அன்று ஒருவாய்க்களி" என்ற பழமொழிக்கேற்ப, சிவாலயங்களில் அன்றைய தினம் களி படைத்து, பக்தர்களுக்கும் பிரசாதமாக வழங்கப்படுகிறது

## பதஞ்சலி முனிவரும் திருவாதிரையும்

பாற்கடலில் பள்ளிகொண்ட பெருமாளைத் தாங்கி நின்ற ஆதிசேஷன், திடீரென பெரு மாளின் எடை அதிகரிப்பதை உணர்ந்தார். அதைக் தாங்க முடியாத ஆதிசேஷன் விஷ்ணு வை நோக்க, அவரோ பரவச நிலையில் புன்ன கைத்துக் கொண்டிருந்தார்.

அவரது பரவசத்திற்கான காரணத்தை வினவ, மகாவிஷ்ணுவோ தான் சிவபெருமானின் நடனக்காட்சியை மானசீகமாகக் கண்டு களிப்பதாகக் கூறுகிறார்.

தானும் சிவபெருமானின் நடனக் காட்சி யைக் காணவேண்டும் என்ற தன்னுடைய ஆசையை பரமபதநாதனிடம் சொல்ல, அவரோ ஆதிசேஷனுக்கு ஆசி அளித்து அனுப்பினார். அத்திரி முனிவருக்கும், அனுசூயைக்கும் மகனாக அவதரித்த ஆதிசேஷன், பதஞ்சலி முனிவராக உயர்ந்தார்.

தன் பிறவியின் நோக்கத்தை நிறைவேற்ற பாதி முனிவராகவும், பாதி பாம்பாகவும் உருக் கொண்டு தவமிருந்தார் பதஞ்சலி முனிவர். அவரது தவத்தில் மகிழ்ந்து காட்சி அளித்தார் ஈசன். ஈசனின் தாண்டவத்தைக் காண விரும்பும் தனது ஆசையை வரமாகக் கேட்க, "உன்னைப் போலவே, வியாக்ரபாதரும் எனது நடனத்தைக் காண தவம் செய்து வருகி றார். இருவரும் தில்லை வாருங்கள். அங்கு உங்க ளின் விருப்பம் நிறைவேறும் " என்று வரமளித்து மறைந்தார்.

பதஞ்சலி மற்றும் வியாக்ரபாத முனிவர் இருவரும், ஈசனின் திருநடனத்தைக் காண தில்லைக்கு வந்து சேர்ந்தனர். மார்கழித் திருவாதிரை நன்னாளில் இருவரும் ஈசனின் ஆனந்த தாண்டவத்தைக் கண்டு பிறவிப் பயனை அடைந்தனர். அந்நன்னாளில் ஆடல்வல்லானின் தரிசனத்தைக் கண்டால், தீராத நோய்களும்,



நாம் செய்த பாவங்களும் விலகி இப்பிறவியின் பயனைப் பெற்று முக்தியை அடையலாம்.

## சிறப்பு வாய்ந்த திருஉத்திரகோசமங்கை ஆருத்ரா தரிசனம்

ஆதிசேஷனுக்காக ஆனந்தத் தாண்டவமாடிய சிதம்பர கனகசபை,

ஊர்த்துவத் தாண்டவமாடிய திருஆலங்காடு ரத்தினசபை,

பாண்டிய மன்னனின் வேண்டுதலுக்காக கால் மாறி ஆடிய மதுரை வெள்ளிசபை,

நெல்லையப்பராய் எழுந்தருளிய தாமிர சபை,

திரிபுரத்தாண்டவம் செய்த திருக்குற்றால சித்திர சபையிலும் ஆருத்ரா தரிசனம் சிறப்பாக கொண்டாடப்பட்டாலும், உத்திரகோசமங்கையில் கொண்டாப்படும் ஆருத்ரா தரிசனம் தனிச்சிறப்பு வாய்ந்தது.

"மண் தோன்றியபோதே மங்கை தோன்றியது" என்ற சிறப்புடைய உத்திரகோசங்கையில்தான், முதன் முதலாக ஆருத்ரா தரிசனம் கொண்டாடப் பட்டதாக வரலாறு கூறுகிறது.

அன்னை பார்வதிக்கு வேதாகமங்களின் ரகசியங்களை சிவபெருமான் உபதேசித்தமையால் இத்தலம் உத்தரகோசமங்கை என்னும் பெயர் பெற்றதாக தல வரலாறு கூறுகிறது.

ஒலி ஒளி அதிர்வுகளைத் தாங்காத பச்சை மரகதத்தால்ஆன மங்களேஸ்வரரின் மேனியில் எப்பொழுதும் சந்தனம் பூசப்பட்டிருக்கும். வருடத்திற்கொரு முறை மார்கழித் திருவாதிரை நாளில் மட்டும், இறைவன் மேனியில் பூசப்பட்டு இருக்கும் சந்தனம் களையப்பட்டு, மரகத நடராஜர் பக்தர்களுக்கு காட்சி தருவார்.



கிதா-ராஜன்

அன்று இரவே மீண்டும் இறைவன் மேனிக்கு சந்தனம் பூசப்படும்.

திருவாதிரை நன்னாளில், நடராஜருக்கு 32 வகையான அபிஷேகங்கள் நடைபெறும். அதைத் தொடர்ந்து தீபாராதனைகள் காட்டப்படும். அதன் பிறகு, இறைவனை அலங்கரிக்கும் முன்பான, நைவேத்தியம் செய்து ஈசனை பசியாற்றுவார்கள்.

ஏனென்றால் 32 வகையான அபிஷேகத்திற்கு பிறகு எம்பிரானுக்கு பசி தோன்றி விடுமாம். அதனால் நைவேத்தியம் அளித்து விட்டே, அலங்காரம் செய்கிறார்கள். இது வேறெங்கிலும் நடைபெறாத ஒன்றாகும்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாதிரை நன்னாளில் ஈசனின் ஆருத்ரா தரிசனத்தைக் கண்டால், நமது பாவங்கள் நீங்கி புண்ணியம் கிடைக்கும் என்பது ஐதீகம். நமது பாவங்கள் நீங்கி பிறவிப் பயனை அடைய மார்கழித் திருவாதிரையில் இறைவனை தரிசித்து அருள் பெறுவோமாக...

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203

# இப்பிறவி வாழ்க்கை அடுத்த பிறவியை நிர்ணயிக்கும்

145
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் கூறுகிறார்: “மறுபிறவி என்பது இறைவனுடனான என்றும் அழியாத பூரண ஐக்கியம் என்னும் பட்டம் பெறுவதற்குமுன் கல்விக்கூடத்தில் பல வகுப்புகள் வாரியாக முன்னேறிச்செல்வதுபோல், பல பிறவிகள் மூலமான அதன் முன்னேற்றமாகும். பக்குவமற்ற நிலையில் (மெய் பொருளுடனான தமது தெய்வீக அடையாளத்தைப் பற்றி அறியாதிருத்தல்) உள்ள ஆன்மாக்கள் ஸ்தூல சரீரத்தின் மரணத்திற்குப்பின் தாமாகவே இறை ஞ- அனுபூதி நிலைக்குச் செல்வதில்லை. நாம் இறைவனின் வடிவில் படைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் ஸ்தூல சரீரத்துடன் நம்மை அடையாளப்படுத்திக்கொள்வதால், அதனுடைய குறைகளையும், வரையறைகளையும் நாம் ஏற்றுள்ளோம். இறப்பைப்பற்றிய இந்த குறைபாடுள்ள மனித உணர்வு நிலை அகற்றப்படாத வரையில் நாம் மீண்டும் தெய்வங்களாக முடியாது.”

“ஓர் இளவரசன் தன்னுடைய அரண்மனை இல்லத்திலிருந்து ஓடிவிட்டு ஒரு சேரியில் தஞ்சம் புகுந்தான். குடிபோதயினாலும் தீய நடத்தை உள்ளவர்களின் சகவாசத்தாலும், காலப்பபோக்கில் தனது உண்மையான அடையாளத்தை மறந்து விட்டான். அவனுடைய தந்தை அவனைக் கண்டு சொந்த வீடான அரண்மனைக்கு கூட்டிச்செல்லும்வரை, தான் உண்மையில் ஓர் இளவரன் என்பது அவனுக்கு நினைவு இல்லை. இதைப்போலவே நாம் அனைவரும் நமது ஆன்மீக இல்லத்திலிருந்து ஓடிவந்துவிட்ட அண்ட சராசர அரசனின் குழந்தைகளாவோம். நாம் நமது தெய்வீக மரபுரிமையை மறந்துவிடும் அளவிற்கு நம்மை மானிட சரீரங்களுக்குள் வெகுகாலமாக பூட்டிவைத்துள்ளோம். நாம் பூமிக்கு எத்தனை முறை வந்துள்ளோமோ, அத்தனை தடவையும் புதிய குறைபாடுகளையும் புதிய ஆசைகளையும் வளர்த்து வந்துள்ளோம். ஆகவே, எல்லா ஆசைகளையும் நாம் நிறைவேற்றிக்கொள்ளும்வரையிலும் அல்லது விவேகத்தின் வளர்ச்சி மூலம் அந்த ஆசைகளை அகற்றும்வரையிலும் நாம் மீண்டும் மீண்டும் இங்கு திரும்பி வருவோம்.”

மேலும் அவர் கூறுகிறார் “ஒரு குழந்தை சிறுவயதிலேயே இறக்கிறது என்றால் அதற்கு ஒரு காரணம் உண்டு. அவனது மானிட அல்லது தெய்வீக உள்ளார்ந்த ஆற்றலை வெளிப்படுத்த அவனுக்கு போதிய காலம் இல்லாததால் அவ்வாறு செய்வதற்கு அவனுக்கு மற்றொரு சந்தர்ப்பம் அளிக்கப்படும். அத்தகைய நபர் நோய்வாய்ப்பட்டு பள்ளிக்குச் செல்லமுடியாத சிறுவனைப்போன்றவர். நோய்வாய்ப்பட்ட சிறுவன் குணமடைந்த உடன் தனது பாடங்களை எங்கு விட்டானோ அதிலிருந்து தொடங்குவதற்கு அவன் மீண்டும் பள்ளிக்குச் செல்கிறான். அதுபோலவேதான் வாழ்க்கையிலும்கூட. இந்த வாழ்க்கையில் நமது பாடங்களைக் கற்றுக்கொள்ள நாம் ஒரு வாய்ப்பைப் பெறவில்லையென்றால், அவைகளை வேறு எதாவது ஒரு பிறவியில் கற்க வாய்ப்புகள் பெறுவோம். இப்பிறவியில் நாம் எவ்வாறு வாழ்கிறோம்



meegamalar.com

என்பது மறு பிறவியில் நாம் எப்படி இருப்போம் என்பதை நிர்ணயிக்கிறது. வாழ்க்கையின் இறுதிப்பகுதிதான் முதல்பகுதியைவிட முக்கியமானது. ஏனென்றால் இப்பிறவியின் இறுதிப்பகுதியில் நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, அதுமாதிரியே மறுபிறவியின் ஆரம்பகாலத்தில் நீங்கள் இருப்பீர்கள்."

அன்பு குருதேவர் தொடர்கிறார் " நீங்கள் இறைவனுடன் வாழ்ந்தீர்களானால். வாழ்வு மற்றும் சாவு, ஆரோக்கியம், நோய் ஆகிய மாயையிலிருந்து குணப்படுத்தப்படுவீர்கள். இறைவனில் இருங்கள். அவனது அன்பை உணருங்கள். எதற்கும் அஞ் சாதீர்கள். இறைவனின் கோட்டையில் மட்டுமே நாம் பாதுகாப்பைக் காண முடியும். அவனது இருப்பைத் தவிர பாதுகாப்பான ஆனந்தப்புகலிடம் வேறு எங்கும் இல்லை. நீங்கள் அவனுடன் இருக்கும்பொழுது உங்களை எதுவும் தொடமுடியாது," என்று ஆணித்தரமாகக் கூறுகிறார் குருதேவர்.

குருதேவர் கூறியுள்ள பயிற்சிகள் அனைத்தும் ஸ்ரீ தார்மீக வாழ்க்கை வாழ்வது ஸ்ரீ வாழ்க்கையில் ஆத்மா பூரணத்துவம் அடைவதற்காகத்தான். குருதேவர் கூறியவாறு ஒரு பக்தன் இறைவன்மேல் விசுவாசத்தை வளர்த்துக்கொண்டால் அந்த பக்தனுடன் இறைவன் இருப்பான். இப்புவியில் பிறப்பெடுத்துவரும் மனிதன் இவ்வுலகத்தைப் புரிந்து கொண்டு, நன்மை தீமைகளையும் புரிந்துகொண்டு அதற்கேற்ப வாழவேண்டும் என்பதைத்தான் குருதேவர் போதிக்கிறார்.

த்ரேதாயுகம், த்வாபரயுகம் கலியுகம் ஆகிய மூன்று யுகங்களிலும் யுகங்களின் முடிவிற்கு முன்னர் அவ்வப்போது நெருப்பாலும் வெள்ளத்தாலும் பேரழிவுகள் மற்றும் பகுதி அளவான பிரளயம் ஆகியவை ஏற்படுகிறது. ஆனால் சத்தியயுகம் அல்லது க்ருதயுகம் முடியும்போதுதான் முழுபிரளயம் ஏற்படுகிறது. அது வாய்மையின் காலம். அப்பொழுது மனித மனதினால் படைப்பின் அனைத்து புதிர்களையும் புரிந்துகொள்ளமுடியும். அப்பொழுது வாழ்பவர்கள் இறை தொடர்பில் வாழுவர். வாழ முடியும்ஞ். அவர்கள் பரஸ்பரம் அன்பு செலுத்தி வாழ்வர். அதனால் அவர்கள் தேவர்களாக வாழ்வர். அப்பொழுது எந்தவித உயிர் சேதமும் ஏற்படாது. " அந்த யுகத்தில் வாழும் மனிதர்கள் இறைவனைச் சார்ந்து வாழுவர். ஆகையினால், இறைவன் அவர்கள் அனைவரையும் வீடுபேறு அடைவதற்காகப் படைக்கப்பட்டனர்; இறைவன் அவர்களை தன்னுடன் முழுவதுமாக சேர்த்துக்கொண்ட பிறகுதான் முழு பிரளயம் ஏற்படுகிறது என்கிறார் குருதேவர். அதற்கான ஓர் உதாரணமும் உள்ளது. இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் பாண்டவர்கள் குளித்த குளம், கும்பிட்ட கோயில் எல்லாம் கடலினுள் மூழ்கிவிட்டது. அந்த இடத்தின் பெயர் 'பாவா நகர் கடற்கரை'. ஆனால் இன்றைக்கு அவ்விடத்தில் தினமும் இரண்டு கி.மீ. தூரத்தில் கடல் நீர் உள்ளே செல்லும். அந்த சமயம் மக்கள் சென்று அந்த குளம், கோவில், கொடிக்கம்பம் இருப்பதைப் பார்த்துவிட்டு திரும்புவர். மக்கள் அவ்விடத்தினின்று திரும்பிய பின்னர் தானாகவே கடல் நீரில் அவ்விடம் மூழ்கிவிடுவதை கரைக்கு திரும்பிய மக்களால் காண முடிகிறது. இன்றைக்கு இந்நிகழ்வு நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இதை அங்கு செல்பவர்கள் பார்க்கின்றனர்.

மனிதனின் உண்மைத்தன்மை இறைவனின் குழந்தைகளாகவே இருப்பதுதான். 'சத்தியம்தான் இறைவன்; இறைவன் தான் உண்மை" என்ற தத்துவத்தை முழுமையாக நிலைநாட்டுகின்ற யுகம்தான் 'சத்திய யுகம்'. ஒவ்வொருவரும் இறைவனின் குழந்தைகள் என்று பயிற்சியால் முயற்சி செய்து தெரிந்துகொண்டு வாழ்ந்தால், உலகம் எவ்வித அழிவும் இன்றி சீராகவும் சிறப்பாகவும் நலமாகவும் இருக்கும். அநீதி, அதர்மம் போன்றவற்றை இழைக்காமல் வாழ்ந்தால் இறைவன் நம்முடன் இருப்பான். அது மட்டுமின்றி நம் ஆன்மா இறைவனடி சேர்ந்துவிடும். இவ்வாறு ஒவ்வொரு ஆத்மாவும் பூரணத்துவத்தை அடையவேண்டும். அதற்காகத்தான் ஆன்மா ஒவ்வொரு முறையும் பிறவியெடுத்து பூமிக்கு வருகிறது. சரியான வாழ்க்கை வாழ்வதற்கான திடமான முயற்சி, மற்றும் ஓர் உண்மையான குருவின் உதவி ஆகியவற்றினால் ஒருவரது ஆன்மீக பரிணாமம் நிச்சயமாக விரைவுபடுத்தலாம். அனைவரும் இறைவனை நன்றாகப் புரிந்துகொண்டால் மட்டும்தான் இறைவனிடத்தில் விசுவாசம் வளர்த்துக் கொள்ள முடியும். விசுவாசம் கொண்டால் நாளடைவில் இறைவனுடன் நெருக்கமான உறவு ஏற்படும். அவ்வாறான நெருக்கம் எவ்வாறு அந்த பக்தனை வழிநடத்தும் என்பதை நாம் அறிய வேண்டும்.

இறைவன் ஒரு பணியை செய்ய நமக்கு கட்டளையிடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். நாமும் அந்தப் பணியைச் செய்ய ஆரம்பிக்கிறோம். ஆரம்பிக்கும்போது மிகவும் ஆர்வமாக இருக்கும். பின்னர்

ஆன்மிகமலர்

அப்பணியைச் செய்யச் செய்ய அதில் ஒரு வெறுப்பு எண்ணம் ஏற்படும். வெறுப்புடன் செய்தால் சரியாகச் செய்து முடிக்க முடியாது. அப்பொழுது அந்த பக்தனுக்கு திடீரென்று ஒரு எண்ணம் குறுக்கிடும். “இறைவனை உணர்ந்த ஒருவன் எந்தப் பணியிலும் சோர்வடையக்கூடாது; அது நன்றன்று. அதுமட்டுமின்றி சரியாகவும் செய்ய முடியாது." இறைவனை அறிய வேண்டும், அவனைக் காண வேண்டும், அவனுடன் பேச வேண்டும். அவனை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடையவன், உலகத்தில் வாழ்ந்தாலும் அவன் இறைவனுடன்தான் வாழ்ந்துகொண்டிருப்பான். அவ்வாறு இறைவனுடன் வாழுபவன் பற்றற்ற நிலையிலிருப்பான். அவன் செய்யும் பணி எதுவாகயிருந்தாலும் பற்றற்ற ஆர்வத்துடன் செய்யவேண்டும். பற்றற்ற ஆர்வத்துடன் செய்யும்பொழுது பணியையும் சரியாகச் செய்ய இயலும்; அதே சமயம் அதனுடைய பலன் இறைவனைச் சென்றடையும். அப்பொழுது அவன் இறைவனுக்காக வாழ்கிறான் என்று பொருள்படும். இந்தநிலை பணியைச் செய்பவனுக்கு மகிழ்ச்சியையும் மனநிறைவையும் ஏற்படுத்துகிறது. ‘இந்த பணியை எப்போது முடிப்பேன், எப்படி முடிப்பேன்’ என்ற மனஅலைச்சலுடன் செய்கின்ற அதே பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் இறைவனிடத்தில் ஒரு பிரார்த்தனை செய்ய வேண்டும். அதன்பின்னர் மிக்க ஆர்வத்துடன் செய்துகொண்டிருப்பதைக் காணலாம். அந்த இறைபக்தன் இது எவ்வாறு நடக்கிறது என்று ஆச்சரியமடைவான். அவனுக்கு திடீரென்று தோன்றிய உபாயம் வழிகாட்டுகிறது அவ்வளவுதான். இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்வது என்பதுதான் உபாயம். அந்த பக்தனுடன் இறைவன் இருப்பதால் பிரார்த்தனை செய்வதற்கு அவனுக்கு இறைவனே காட்டிய வழிதான். இறைவன் நினைத்தால் எதையும் செய்யவைப்பான். நாம் செய்கின்ற எல்லா பணிகளையும் இறைவனின் கட்டளைப்படிதான் நடக்கிறது. அவன் நல்ல பணிகளைச் செய்ய வைப்பான். அவற்றை பற்றற்ற ஆர்வத்துடன் செய்தால் அது இறைவனுக்காகச் செய்வதாகும்; அவற்றை நன்றாகவும் வெகு எளிதாகவும் செய்யலாம். அதேபோல் இவ்வுலக வாழ்வு பற்றற்ற நிலையிலிருந்தால், அது இறைவனுக்காக வாழ்வதாகும். பக்தன் இறைவனுடன் விசுவாசமாக இருந்தால் மேலே கூறிய நிலைக்கு இறைவன் அவனை உயர்த்திவிடுகிறான். இறைவன் பக்தனுடன் இருக்கும்போது அவனுக்கு எந்த சோம்பலும் வராது. மாயையின் ஆதிக்கத்தால் சோம்பலும் வேலையில் ஆர்வமின்மையும் ஏற்படுகிறது. வேலையில் சலிப்படையும். இறை அருள் இல்லையெனில் மாயை புகுந்துவிடும்.

இறைவனிடத்தில் நாம் அனைவரும் விசுவாசத்துடன் இருக்கிறோம் என்பதை நாம் அவனுக்குத் தெரிவிக்கவேண்டும். அது எப்படித் தெரிவிப்பது? இறைவனிடத்தில் நான் விசுவாசம் வைத்திருக்கிறேன் என்று வெறும் வாயால் சொல்வதில் அர்த்தமில்லை; செய்து காட்டவேண்டும். அதாவது இறை விதிமுறைகளை மீறிய செயல்களை நாம் நினைக்கக்கூடாது; சொல்லக்கூடாது; செய்யக்கூடாது. அவனுக்குப் பிடித்ததை மட்டும் அதாவது இறைவிதிகளுக்குட்பட்டு நம் கடமைகளைச் செய்ய வேண்டும். உலகப்பெருட்கள் மீதும் உலக வியாபாரங்கள் மீதும் மனதைச் செலுத்தாமல் எப்பொழுதும் இறைவனுடனேயே இருக்கவேண்டும். இவ்வாறு ஒரு பக்தன் செய்தால் அவனுக்கு இறைவன், இறை இருப்பை உணர்த்துவான். அதன் பின்னர், இறைவனுக்கு மேலான அல்லது இறைவனுக்கு நிகரான எந்தப்பொருளுமே இவ்வுலகில் எங்கேயும் இல்லை என்ற உண்மையை அவனுக்கு இறைவன் உணர்த்துவான். அதன் பின்னர், அவனுடைய மனமானது வேறு எங்கேயும் போகாது. போனாலும் எதிலும் லயிக்காது. இவ்வாறு இறைவிதிமுறைகளை நன்றாகத் தெரிந்துகொண்டு, நாம் இப்புவியில் பிறப்பெடுத்து வந்ததன் நோக்கத்தை நன்கு தெரிந்துகொண்டு அதற்கேற்றவாறு வாழ்க்கையை நடத்தினால் அந்த பக்தன் காப்பாற்றப்படுவான். இறை விதிமுறைகளை மீறாமை, தியானப்பயிற்சி போன்றவை, இறுதியில் அவனுடய கர்மவினைகள் துடைக்கப்படுவதுடன் அகங்காரம் அழிக்கப்பட்டுவிடுவான்; பற்றும் அறுக்கப்பட்டுவிடுவான். பின்னர் அவனை இறைவன் தன்னுடன் இணைத்துக்கொள்வான். இறைவனுடனுள்ள விசுவாசமும் எல்லையற்ற, அளவற்ற பக்தியும் நம்பிக்கையும் ஒரு பக்தன், தனது சம்சார வாழ்க்கையிலிருந்து விடுதலைபெற காரணமாகிறது. வேறு எந்தப்பொருளிடமோ அல்லது உலக வாழ்க்கையிலோ; பற்றும் ஆசையும் வைக்காமல் இறைவனிடத்தில் மட்டும் பறுறும் ஆசையும் வைப்பதுதான் நமக்கு இறைவன்மேலுள்ள விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறது. அதுவே அவன் நம்மிடம் வருவதற்கு வாய்ப்புகளாகின்றன.

### இத் தொடரின் முடிவுரை

ஒரு மனிதன் பிறவியெடுத்து பூமிக்கு வந்தான் என்றால் அவனுடைய வாழ்க்கையில் அவன் இறைவனை அறிந்து உணரவேண்டும்

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அனுபவம் .காம்



குருப்ரியா

**நமது இதழின் ஆரம்பக்கால எழுத்தாளர்களில் மிகவும் நட்புக்குரிய, நல்ல கருத்துக்களை தொடராக எழுதியதிய குருபிரியா அவர்களுக்கு ஆசிரியர் குழுவின் சார்பில்**

## சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

(மீண்டும் தங்கள் எழுத்தை எதிர்பார்க்கிறோம்)

என்ற குறிக்கோளுடையவனாக இருக்க வேண்டும். இறைவனை உணர்வது என்றால் இறை – அனுபூதி பெறுவது எனப்பொருளாகிறது. இறை அனுபூதி பெற வேண்டுமென்றால் அவன் தார்மீக வாழ்க்கை வாழவேண்டும். மனம், வாக்கு, செயல் இவற்றை தெய்வீகமயமாக்கவேண்டும். எப்படியெனில் மனதாலும் வார்த்தையாலும் செயலாலும் பிறருக்கு எந்தக் கெடுதலும் விளைவிக்கக்கூடாது. அதற்கு மன ஒழுக்கம், சொல் ஒழுக்கம், செயல் ஒழுக்கம் எனப்பெயர். பிறரை தன்னைப்போன்று கருதவேண்டும்; யாரிடத்திலும் விருப்பு வெறுப்பு இல்லாமல் வாழவேண்டும்; உலகத்தில் வாழ்ந்தாலும் உலகப்பொருளுடன் உள்ள பந்தத்தை மானசீகமாக துறக்க வேண்டும். அப்படியென்றால் எந்தப் பொருள்மேலும் எவ்வித ஆசையும் இருக்கக்கூடாது. குறிக்கோள் இறைவன் என்றால் தியானம் செய்ய வேண்டும். தியானம் மிகவும் முக்கியம். ஒருமணி நேரம் எழுதினால் 2 மணிநேரம் படிக்க வேண்டும். 2 மணி நேரம் படித்தால் 3 மணி நேரம் சிந்திக்க வேண்டும். 3 மணி நேரம் சிந்தித்தால் 24 மணி நேரமும் தியானம் செய்ய வேண்டும். 24 மணி நேரமும் தியானம் செய்வதென்றால் அது சாத்தியமாகாது. தம்மால் முடிந்த அளவு நேரத்தை ஒதுக்கி தியானம் செய்து, தமது சித்தத்தை சுத்தி செய்து வாழவேண்டும். மனிதனாகப் பிறந்தவர்கள் அனைவரும் கண்டிப்பாக இறைவனை நினைத்து தியானம் செய்தே ஆக வேண்டும். அதுதான் அவனுடைய சுயதர்மம் ஏனென்றால் பல பிறவிகளில் நம்மால் ஏற்பட்டுள்ள, அதாவது நாம் செய்த கர்மவினை முடிச்சிகள் அனைத்தும் நம்மால்தான் அவிழ்க்கப்பட வேண்டும். அவை, நம்மை இறைவனிடம் சேரவிடாமல் தடை செய்கிறது. எனவே அவற்றை அவிழ்த்தால்தான் அந்தத் தடை நீங்கும். அது தியானத்தால் மட்டும், அதாவது சரியான தியானத்தால் மட்டும்தான் அவற்றை அவிழ்க்க முடியும். எல்லா கர்மங்களும் தீர்ந்த பின்னர் ஸத்வ ரஜஸ் தமஸுகளாகின்ற (ஸத்வ குணம் ரஜோகுணம் தமோகுணம்) முக்குணங்களும் அடங்கியபின்னர் கார்மேகங்களில்லாத தெளிந்த நிர்மலமான நீலாகாயத்தில் சூரியன் தென்படுவதுபோன்று அழுக்குகளற்ற தெளிந்த நிர்மலமான நம் மனதில் ஞானசூரியனாகின்ற இறைவன் தென்படுவான். இவ்வாறு தியானம் சமாதி நிலையை கொடுக்கிறது. சமாதிநிலை ஞானத்தைக் கொடுக்கிறது. ஞானம் முக்தியை கொடுக்கிறது. முக்கி என்றால், எந்தத் துன்பமோ, துக்கமோ, சோகமோ வந்தாலும் அவை நம்மை பாதிக்காது. அதை நாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்போம். ஆனால் அந்த துக்கம் நம்மை தொடாது. வாழ்க்கையில் என்ன வேண்டுமோ அதை அடைந்து நிம்மதியாக ஆனந்தமாக வாழ்வது தான் முக்கி. இறை – அனுபூதி பெற்ற ஒருவன் எப்பொழுதும் இறைவனுடன் வாழ்ந்து கொண்டிருப்பான். அந்த நிலை, நமக்கு சுற்றி என்ன நிகழ்ந்தாலும் அவற்றை எதையுமே உணர முடியாமல் இறைவனை மட்டுமே உணரக்கூடியதாக இருக்கும். அனைத்து பந்தங்களிலிருந்தும் உள்ள விடுதலைதான் முக்தி. குருதேவருடைய மொழியில் கூறினால் அனைத்திலிருந்தும் கிடைக்கப்பெறும் ‘சுதந்திரம்’ எனலாம். எந்தத் துன்பமுமில்லாத ஆனந்தமான வாழ்க்கைதான் உண்மையான முக்தி யின் லட்சியம். முக்தி என்பது மீண்டும் பிறவாமையைக் கொடுக்கும். முக்தியடைந்தவன், கருமாறி, உருமாறி வரமாட்டான். இதுதான் முக்தியின் நிலை.

**இத்தொடர் இத்துடன் இனிதே நிறைவுறுகிறது...**

– குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.
9894595909



# 27 நட்சத்திரங்கள் தினமும் வந்து வணங்கும் சுயம்பு முருகன் கோவில், நட்சத்திர தோஷம் போக்கும் அற்புதம்





குன்றுகள் யாவும் குமரனின் குடில்கள்தான்!! அன்பர் உள்ளங்களில் உயர்ந்து விளங்குதல் போல மலைகள் மீது உயர்ந்து குடிகொண்டு உய்விக்கின்றான் தனது உத்தமத் தொண்டர்களை....!

அப்படியே அடியார்களுக்கு அருள் வழங்கும் அதி உன்னதத் திருத்தலமாகத் திகழ்கிறது நட்சத்திரக்கோவில் எனப்படும் நட்சத்திரக்குன்று. சுயம்பு லிங்கங்களைப் பல்வேறு திருத்தலங்களில் தரிசித்திருக்கலாம்.

ஏன்? வேலூர் சேண்பாக்கத்தில் சுயம்பு கணபதியைக் கூட பார்த்திருப்போம். சுயம்பு முருகனை எங்கேனும் கண்டதுண்டா? அதுவும் மலை மீது?? அப்படி சுயம்பு வேலவனை வணங்கும் பாக்கியம் இந்த நட்சத்திரகிரியில் நாம் பெறலாம்.

தென்கயிலாயம் என்று போற்றப்படும் பருவத மலையில் போதன், போதவான், புத்திராண்டன், புருகூதன், பாண்டரங்கன், சோமன், வாமன் ஆகிய ஏழு தவசிகள் தவம் புரிந்துக் கொண்டிருந்தனர். அப்போது வாழைப்பந்தல் அமைத்து, சிவலிங்கம் பிடித்த அம்பிகை, நீர் வேண்டி கணபதியையும், கந்தனையும் அனுப்பினாள்.

கணபதி காகமாய் சென்று ஜமதக்னி முனிவரின் கமண்டலத்தைக் கவிழ்த்து, (காவிரியை உற்பத்தி செய்தது போல்..) கமண்டல நதியை உற்பத்தி செய்தார். கந்தனோ பருவதமலை மீது தனது சக்திவேலை ஏவினான். சீறிப்பாய்ந்த வேல் தவசிகள் ஏழ்வரின் உடலைக் குத்தி கிழித்தது. செந்நீராகப் பெருக்கெடுத்தது நதி. அதுவே சேய் (செய்யார்) நதியானது.

கந்தனின் புனிதமிகு வேல் குத்தியக் காரணத்தால் ஏழ்வரும் முத்தி பெற்றனர். அவர்கள் ஏழ்வரும் அந்தணர் ஆதலால் அந்தணர் எழுவரைக் கொன்ற பாவம் பிரம்மஹத்தியாய் சூழ்ந்தது குமரனை.

இதனால் அன்னை பார்வதியின் ஆலோசனைப் படி சேயாற்றின் வடகரையில் (காஞ்சி, கடலாடி, மாம்பாக்கம், மகாதேவமங்கலம், எலத்தூர்,




பூண்டி, குருவிமலை) ஏழு கரைகண்டங்களையும், தென்கரையில் (மண்டகொளத்தூர், கரைப் பூண்டி, தென்பள்ளிப்பட்டு, பழங்கோவில், நார்த்தாம் பூண்டி, தாமரைப்பாக்கம், வாசுதேவன்பட்டு) ஏழு கயிலாயங்களையும் உருவாக்கி சிவலிங்க வழிபாடு செய்து விமோசனம் அடைந்தார்.

அப்போது தேவர்கள் வந்து வழிபடும் தேவனாம்பட்டு தேவகிரியிலும், நட்சத்திரங்கள் வந்து வழிபடும் நட்சத்திரகிரியிலும் முருகன் இளைப்பாறினார். அதோடு தனது அன்பர்களுக்கு அருள் வழங்கும் தலமாகவும் ஆக்கிக் கொண்டான். நட்சத்திரகிரியில் கந்தன் குடிகொண்ட சுவாரசியமான வரலாற்றினைத்தெரிந்து கொள்வோம்.!

முன்னொரு சமயம் இப்பகுதியில் இரண்டு சிவாச்சாரியார்கள் வாழ்ந்து வந்தனர். அவர் கள் இருவரும் ஆடி கிருத்திகை நாளில்திருத்தணிகை சென்று ஸ்ரீ சுப்பிரமணியரை வழிபட்டு வந்தனர். ஒரு வருடம் அவர்களால் ஆடி கிருத்திகையன்று தணிகைமலை செல்ல இயலவில்லை. இதனால் இருவரும் மிகுந்த மனவருத்தம் அடைந்தனர்.

இவர்களின் கனவில் தோன்றிய குமரன், நான் நட்சத்திரகரி என்னும் குன்றின் நடுமலையில் சுயம்பு வடிவாய் எழுந்துள்ளேன். சூரியன் சந்திரன் உள்ளவரை 27 நட்சத்திரங்களும், நாகமும் நித்தம் என்னை பூஜிக்கும். நட்சத்திர குன்றின் அடிவாரத்தில் அமைந்திருக்கும் சந்திர புஷ்கரணி சுனையில் இருந்து நாகம் உங்களுக்கு வழிகாட்ட என்னை வந்தடையுங்கள் எனக் கூறி மறைந்தார்.



திடுக்கிட்டு கண் விழித்த சிவாச்சாரியார்கள் விடியற்காலை பிரம்ம முகூர்த்த வேளையில் சுனையை அடைந்து, ஒளி பொருந்திய நாகம் ஒன்று வழிகாட்டிட, குன்றின் நடுவில் ஓரிடத்தில் சென்று மறைந்தது. அங்கே சப்பாத்திக்கள்ளி செடிகளுக்கு இடையே சுயம்புலிங்க வடிவாய் முருகன் காட்சியளித்தார்.

இதை கேள்வியுற்ற ஊர் மக்கள் ஒன்றுகூடி, சுயம்பு சுப்பிரமணியரை வணங்கினர். பின்னர், வள்ளி தெய்வானை உடனான முருகன் உருவச் சிலையும் ஸ்தாபித்து, ஆலயமும் எழுப்பப்பட்டது. அற்புதப் பூஜைகளும் நடத்தப்பட்டது.

சேயாற்றின் கரையோரமாக சிறு குன்றின் மீது குறைகளையெல்லாம் களையும் குமரன் இனிதே வீற்றருள்கின்றார்.

சுமார் 60 படிகள் ஏறி, முதலில் ஸ்ரீ சித்தி விநாயகரை வணங்குகின்றோம். மூன்று நிலை இராஜகோபுரம் எழுப்பப்பட்டுள்ளது. இடப்புறம் மேற்கே வள்ளி தெய்வானையுடனான சுப்பிரமணியர் உற்சவர் சிலையும், வலப்புறம் ஸ்ரீ காசி விசாலாட்சி உடனுறை ஸ்ரீ காசி விஸ்வநாதர் சன்னதியும் உள்ளன. கிழக்குப்புறம் பலிபீடம், மயில்வாகனம், கொடிமரம் காணப்படுகின்றன. மகா மண்டபம், அர்த்தமண்டபம், கருவறை ஆகிய அமைப்பில் சன்னதிகள் அமைந்துள்ளன.

கருவறையுள் ஜோதிமயமாய் வள்ளி மற்றும் தெய்வானையுடன் கந்தன் உருவாய் எழுந்தருள, கீழே சுயம்புவாய் லிங்க வடிவில் பூமியிலிருந்து தானாக எழுந்து பேரொளி வீசுகின்றார். நாகம் இங்கே தலைக்கு பின்னே பட மெடுத்து நிற்பதைக் காண மெய் சிலிர்க்கின்றது. இந்த முருகனை நாகம் அடையாளம் காட்டியதன் நினைவாக நித்தமும் நாகபாசம் பொருத்தப்படுகின்றது.

திருவாசியும், கிரீட குண்டலங்களும் கந்தனை அலங்கரிக்க, கண்கொள்ளாக் காட்சியாய் இருக்கிறது இந்த சுயம்பு சுப்பிரமணியர் தரிசனம். வேண்டியதையெல்லாம் தருவான் இந்த வேலவன். 27 நட்சத்திரங்களும், கார்த்திகைப் பெண்களும் அனுதினமும் இங்கு ஆறுமுகனைப் பூஜிப்பதாக ஐதீகம்.

மலைக்கோவிலின் வெளியே மலேசிய பத்துமலை முருகனை







நினைவுகூறும் விதத்தில் கம்பீரமாய் திகழ்கின்றான் கந்தன் தங்க நிறத்தில்..!

மலையிலிருந்து காணும் அற்புதமான இயற்கை எழில் காட்சி மனதைத் தூய்மைப்படுத்தி, சுத்திகரிக்கின்றது. வீசும் தென்றலோ விவேகம் அளிக்கின்றது. மலைக்கு வாகனங்கள் மூலம் செல்ல பாதையும் அமைக்கப்பட்டுள்ளது. அடிவாரத்தில் தீர்த்த சுனையும், அனுமன், கணபதி, நவகிரகங்கள் மற்றும் இடும்பன் சன்னதிகளும் அமைந்துள்ளன.

இந்த நட்சத்திரக்குன்று மீது வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் நான்கு பாடல்களைப் பாடிச் சிறப்பித்துள்ளார்.

மேலும் இந்த முருகன் மீது ஸ்ரீ சிவசுப்ரமணிய மாலை, நட்சத்திரக் குன்ற வழிநடைப்பதம், உடுமலைப் பாமாலை (உடு = நட்சத்திரம்) நட்சத்திரக்குன்று அருள்மிகு சிவசுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ் போன்ற எண்ணற்ற பாமாலைகள் புலவர் பலரால் இயற்றப்பட்டுள்ளது.

சித்திரை வருடப்பிறப்பு பால்குட அபிஷேகம், ஆடி கிருத்திகை பெருவிழா, கந்தர் சஷ்டி விழா, கார்த்திகை தீபம், தை கிருத்திகை, பங்குனி உத்திர பிரம்மோற்சவம் (அதில் ஏழாம் நாள் திருத்தேர்), வைகாசி விசாகம், மாத கிருத்திகைகள் என விழாக்கள் பற்பல.. சஷ்டியில் முருகப்பெருமான் எலத்தூர் சென்று அன்னை சக்தியிடம் வேல் வாங்கி வந்து, நட்சத்திரக்கோவிலில் சூரசம்ஹாரம் செய்வார். அதன்பின் சேயாற்றங்கரையில் அமைந்துள்ள குருவிமலை கிராமத்திற்கு சென்று, அங்கே ஆற்றில் தீர்த்தவாரி நடக்கும். இவ்விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொள்வார்கள்.

கிருத்திகைகளில் தேன் அபிஷேகம் செய்து, சம்பா சாதம் படைத்து, செவ்வரளி மாலை சாற்றி, அன்னதானம் செய்து வழிபடுபவர்களின் நாகதோஷம், புத்திர தோஷம் மற்றும் திருமண தோஷங்கள் அகலம். புது வாழ்வு பிறக்கும்.

பாலபிஷேகம் செய்து, சிவந்த வெட்சி புஷ்பங்களால் அர்ச்சித்து, மாதுளைக் கனி படைத்து, வழிபடுவோரின் நட்சத்திர தோஷங்கள் யாவும் விலகி, நல்லருள் கட்டும்.

திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் தாலுகாவில் அமைந்துள்ளது இத்தலம். திருவண்ணாமலை மாவட்டம் போளூரிலிருந்து செங்கம் செல்லும் பேருந்து சாலையில் சுமார் 8 கிலோமீட்டர் தொலைவில்அமைந்துள்ளது நட்சத்திரக்குன்று எனப்படும்நட்சத்திரக்கோவில்!!

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179



# நோய்களை போக்கும் மார்கழி மாத காற்று

மனிதர்களின் ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை முதல் ஆணி வரை உள்ள காலம் பகலாகவும், ஆடி முதல் மார்கழி வரை உள்ள காலம் இரவு என்பதாகும். அதன்படி பார்க்கும்போது தேவர்களுக்கு இரவு காலம் முடிகிற காலைப்பொழுது மார்கழி மாதம்.

மார்கழி மாதம் என்பது தேவர்களுக்கு அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரையிலான, இரண்டு மணி நேரத்தை குறிக்கும். இறை வழிபாட்டுக்கு மிக உகந்த நேரமான பிரம்ம முகூர்த்த நேரமாக இந்த நேரம் அமைவதால் மார்கழி மாதம் என்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது.

## மரணத்தை வெல்லும் மார்கழி

மார்கழி மாதத்தில் காலை எழுந்து நீராடி ஆண்கள் கோயிலுக்கு செல்ல வேண்டும். பெண்கள் வீட்டு வாசலில் கோலம் போட வேண்டும் என்பது காலம் காலமாக நாம் பின்பற்றி வரும் மரபு. ஏன் மார்கழி மாதத்தில் அதுவும் இந்த கடும் குளிரில் இதை செய்ய வேண்டும் என நீங்கள் சிந்தித்தது உண்டா..?

மார்கழி மாதத்தின் அதிகாலை நேரத்தில் காற்று மண்டலத்தில் புற ஊதா கதிர்களின் ultra violet rays பாதிப்பு குறைவான கற்றை சுவாசிக்க முடியும். இந்த நேரத்தில் வீசும் காற்று உடலுக்கு மிகுந்த நன்மையை தரும். மேலும் இந்த நேரத்தில் சுவாசிக்கும் காற்று நம் ரத்தத்தை சுத்தப்படுத்தும், நரம்பு மண்டலத்தை துடிப்பாக வைத்துக் கொள்ளவும் உதவுகிறது இந்த ஓசோன் நிறைந்த மார்கழி மாத காற்று.

இந்த மார்கழி மாத காற்று நமக்கு புத்துணர்ச்சியை தந்து வாழ்வில் பிரகாசத்தை தரும் என நம்பப்படுகிறது. எனவே உடலுக்கு நன்மை தரும் இந்த மார்கழி மாத பிரம்ம முகூர்த்த நேரத்தில் மக்கள் தவற விடக்கூடாது என கூறப்படுகிறது.

## அதிகாலை கோலம் போட காரணம்?

மார்கழி மாதத்தில் அதிகாலை பெண்கள் வீட்டு வாசலில் கோலமிட்டு பூசணிப்பூ வைக்கும் பழக்கம் கடைப்பிடிக்க பட்டு வருகிறது. பண்டைய காலத்தில் யார் வீட்டில் கன்னிப் பெண்கள் இருக்கிறார்களோ அவர்கள் வீட்டில் கோலம் இட்டு, பூசணிப்பூ வைப்பது மூலம்.. அதிகாலை கோவில் செல்லும் மக்கள் பூசணிப்பூ வைத்த வீட்டில் கன்னிப் பெண்கள் உள்ளனர் என்பதை புரிந்து கொண்டு, மார்கழி முடிந்தவுடன் திருமணத்திற்கு பெண் கேட்க வருவார்கள். அது மட்டுமல்லாமல் ஆண்கள் கோவிலுக்கு செல்வதன் மூலம் மார்கழி மாத காற்றை சுவா சிக்க முடியும், பெண்களுக்கு வெளியே வந்து கோலமிடுவதன் மூலம் மார்கழி காற்றை சுவாசிக்க முடியும்.



# எந்த நிலை உயர்வானது? எந்த நிலை தாழ்வானது?

பனிக்கூட்டிப் பிரதேசங்களில் ஒரு அற்புத விளையாட்டு கால்க ளால் சறுக்கும் விளையாட்டாக இருக்கிறது. இதை விளையாடுபவனின் தீர்மானச்சக்தி அந்த விளையாட்டுக்காரனின் சம நிலை ஆகும். ஒரு பாலும் கோடாத அல்லது எப்பக்கமும் சாயாத அற்புத சமநிலையே அவ்விளையாட்டு வீரனின் அழகாகும். அதுவே பலமாகவும் தெளிகிறது

❖ ❖ ❖

இளமையைக் கொண்டு இளைஞர்கள் வாழ்க்கையில் செய் கின்ற பயிற்சிகள் இந்த பனிக்கட்டி சறுக்கு ஆட்டத்தைப் போன்றது. ஆயினும் அச்சமயத்தில் இடறி விழுந்துவிடாதீர்கள். விழுந்தால் அதுவே உயிரின் வீழ்ச்சிக்கு காரணமாகும்.

❖ ❖ ❖

ஒரு தினசரி குடிகாரனால் எப்பொழுதும் சமநிலை மனதோடு அவனால் மனது வரை இருக்கவே முடியாது. இப்படி இருக்கும் பொழுது இப்படி இருக்கப்பட்டவர்கள் எப்படி பிறரது ஒழுக்கத்தையும் நமது நாட்டையும் குறையைச் சுட்டிக்காட்டி அடிக்கடி அலசிப் பேசுகிறார்கள்? இது எனக்கே புரியவில்லை. அதனால் குடிக்காதீர்கள். இச்செய்கை அசோகரின் ஸ்தூபியை விட உறுதியானது.

❖ ❖ ❖

நாம் எத்தகைய கல்வியை விரும்புகிறோம்? நாமே எது நமக்கு உதவுவது என்றும் எண்ணுகிறோம். ஆயினும் எதையுமே நாம் அறிவதே இல்லை. இந்தக் கேள்வி ஒன்றே என்னுடைய கல்வி ஆகும்.

❖ ❖ ❖

நம்முடைய உடம்பிற்கு நாம் எத்தகைய தேகப் பயிற்சியை விரும்புகிறோம்? எல்லாவிதமான தேகப் பயிற்சி முறைகளும் வழக்க மான நமது மேம்பட்ட வாழ்விற்கு தேவைப்படுகிறது.

❖ ❖ ❖

நாம் எவ்வகையான விளையாட்டைத் தேர்ந்தெடுக்க வேண் டும்? இது சிலரின் மனத்துள் எழும் கேள்வியாக இருக்கிறது. எத்த கைய விளையாட்டை நீ தேர்ந்தெடுத்தாலும் அதிலே நீ மூழ்கிவிடுதல் வேண்டும். அதுவே உனது சிறந்த புத்தியின் மேம்பாட்டிற்கும் அதன் இலக்கான சிந்தனைக்கும் உதவுகிறது.

❖ ❖ ❖

சில சமயங்களில் உனது கல்விப் பயிற்சியுடன் உனது விளை யாட்டும் உன்னை சிறப்பாக தொடர்ந்து கொண்டே வரும். அடிக்கடி ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று ஒளிவிட்டாலும் வேறொன்று சிறி தளவு பாதிக்கப்படும். இது கண்டிப்பாக கவனிக்கப்பட வேண்டியதே. ஆயினும் பயம் கொள்ளாதே. பயத்தினால் தீவிர ஆராய்ச்சி செய்வதும் கூடாது. மிஞ்சினால் இரண்டில் ஒன்று மிக அதிகமாக ஒளிபெறும். அடுத்து இரண்டாவது கட்டத்தில் நிற்கும். இதுவே இதில் இருக்கின்ற உண்மை.

❖ ❖ ❖

படுக்கையறை உத்திகளும் விளையாட்டுகளும் உன்னுடைய பெருந்தன்மையான பெருமைகளை புத்தியைக் கொண்டு விளக்காது. மிக ஆழமான எண்ணங்களும் குறுக்குப்பாதை வழிகளும், மேற்சொன்னவற்றின் புதிய உத்திக் கருக்களாகும். இருப்பினும் முழு மையாக இவைகளைத் தவிர்த்து நலமுற வாழு.



❖ ❖ ❖

அமெரிக்காவில் பணத்தை

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
**செல்: 9444228203**

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

**ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.**

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


சபதமாக வைத்து விளையாட ஒரு இடமும் பல விளையாட்டுகளும் இருப்பதாக சொல்லுகிறார்கள். அந்த இடத்திற்கு அவர்கள் எப்படி தைரியமாகச் செல்லுகிறார்கள் என்று பலர் கேள்வி கேட்கலாம். எனது தாழ்மையான பதில் இதுதான். அங்குள்ள மக்கள் தங்களது சிந்தனையை இன்னமும் வேறுவிதத்தில் ஆட்படுத்திக் கொள்ளவில்லை. அவர்களுடைய மனம் பல நல்ல நினைவுகள் போக இனி தான் சமயத்திலும் தத்துவத்திலும் நுழைய வேண்டும். இது இல்லாதவரை நாடு குழப்பத்தின் எல்லைக்குப் போய்க் கொண்டிருக்கிறது என்று பொருள்.

❖ ❖ ❖

இந்தியாவிற்கு மிகப்பெரிய கலாச்சார பாரம்பரியமும் கலாச்சாரக் கொள்கையும் உள்ளது. நாம் நமது கலாச்சாரத்தையும், நடனத்தையும் நமது விளையாட்டாக எண்ணுகிறோம் இப்படியே தத்துவமும் கடவுளும் நம்முள் நிலவி வருகிறது. அப்படியானால் எந்த நிலை உயர்வானது? எந்த நிலை தாழ்வானது? என்று கேட்காதே. நான் கட்டாயம் ஆரூடம் கூறமாட்டேன். அது என்னுடைய வழியல்ல.

❖ ❖ ❖

எல்லா மேற்கத்திய நாடுகளும் அவர்களின் எதிர்காலத்தை அவர்களே அதிகமாக எதிர்பார்ப்பதைப் போன்று தோன்றுகிறது. எதற்காக என்றால் அது அவர்களின் வருங்கால தத்துவ குணச்சித்திர ஆராய்ச்சிக்காகவும், விவாதங்களுக்காகவுமே. வேறு எதற்காகவும் அவர்கள் காலத்தை விரும்ப வேண்டாம்.

❖ ❖ ❖

எல்லா மேற்கத்திய நாடுகளும் இப்பொழுது அன்றாட பொருளாதார வாழ்க்கையில் மூழ்கி இருக்கின்றது. அவர்கள் அந்த வாழ்க்கையில் வேகமாக போய்க் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவர்களே தங்களது வேகத்தை அதிகமாக அதிலே செலுத்தி அதில் முதன்மை பெற்று பிறகு கடவுளின் பக்கம் திரும்ப வேண்டும். இது ஒரு யதார்த்த உண்மை.

❖ ❖ ❖

மேலை நாட்டவர்க்கு கிறிஸ்தமதம் பிரார்த்தனை செய்வதிலேயும், பிறருக்காக பிரார்த்தனை செய்வதிலேயும் பெரும் நன்மை செய்திருக்கிறது. இது சமயத்துறையின் சிறப்பான முதல் ஆராய்ச்சிப்படி ஆகும்.

❖ ❖ ❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர்
மெயில் புக்



இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க










aanmeegamalar.com

இணையதளத்தை

பார்க்கவும்









# 12 அடி உயரம், 16 டன் எடை கொண்ட ‘முண்டியம்பாக்கம்’ ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஆலய கும்பாபிஷேகம்




‘மூர்த்தி சிரியதாக இருந்தாலும் கீர்த்தியோ பெரியது’, இது பழைய பழமொழி, ஆனால், ‘முண்டியம்பாக்கம்’ மாவட்டத்தின் ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியை பார்த்த பிறகு, இங்கு மூர்த்தியும் பெரிது, கீர்த்தியும் அதை விட பெரியதே ஆகும், என்றே கூறலாம்!

இந்த தட்சிணாமூர்த்தி விக்கிரகம் 12 அடி உயரமும், 16 டன் எடையும் கொண்டது. ‘தெய்வீக சக்தி’ உள்ள இந்த ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியை காண, ‘முண்டியம்பாக்கம்’ மட்டுமின்றி சுற்றுப்புறத்தில் இருக்கும் பல்வேறு இடங்களிருந்து, பக்தர்கள் தரிசனத்திர்க்கு, தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள், என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாதிரியான மூர்த்தியை, தமிழ்நாட்டிலே இக்கோவிலிலும் காணலாம்!



எஸ்.வெங்கடேசன்

இவ்வாலயத்தில் நவம்பர் 7 அன்று கும்பாபி ஷேகம் நடைபெற்றது.

இறைவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு, 64 ரூபங்களில் அருள்பாலிக்கிறார். அதில், தக்ஷிணாமூர்த்தி முதன்மையானவர், எல்லா சிவாலயத்திலும் வழிபாடு

செய்யப்படுபவர்.

நவகிரகத்தில், தேவர்களுக்கு குருவாக பிரகஸ்பதியும், அசுரர் களுக்கு குருவாக சுக்கிராச் சாரி யராகவும் விளங்கியவர்.

குரு தக்ஷிணாமூர்த்தி முன் ஒரு காலத்தில் பிரம்மாவின் மனதில் தோன்றிய மானச புத்திரர்கள் சனகர், சனாதனர், சனந்தனர், சனந்தகுமார் என்ற சனகாதி முனிவர்கள் இவர்கள் வேதங்கள் அனைத்தும் உணர்ந்து அதன் பொருள் கேட்க, இறைவன் தெற்கு முகமாக அமர்ந்து அவர் களுக்கு உபதேசம் செய்தார்.

இருப்பினும் அவர்களுக்கு தெளிவு வரவில்லை, அதனால் இறைவன் சின்முத்திரை காட்டினார். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களை நீக்கினால் இறைவனை அடையலாம் என்று மவுனமாக முத்திரை காட்டினார்.

சனகாதி முனிவர்கள் தெளிவு பெற்று, பல முனிவர்களுக்கு உபதேசம் செய்து அருள் செய்தார். அதன்படி நாமும் வழிபாடு செய்து வருகிறோம்.

நம் வழிபாட்டிற்கு சனாதனதர்மம் என்று பெயர் வர காரணம் சனகாதி முனிவர்களே இதுபோன்று மிகப் பெரிய பெருமைகள் பல கொண்ட குபேர ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி ஆலயம் விழுப் புரத்திலிருந்து திண்டிவனம் சாலையில் 12 கி.மீ. தொலைவில் உள்ள முண்டியம்பாக்கம் கிராமத்தில் ராஜஸ்ரீ சர்க்கரை ஆலைக்கு சொந்தமான அருள்மிகு செல்வவிநாயகர் ஆல யத்தில் குபேர ஸ்தானத்தில், குபேர ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தியாக அருள்பாலிக்கிறார்.

குருபகவன் ராசி மண்டலத்தை சுற்றிவருவதற்கு 12 ஆண்டுகள் ஆகும். அதை கணக்கில் கொண்டு இங்கு குரு தக்ஷிணாமூர்த்தி உயரம் 12 அடியாகவும், குருபகவான் தசை 16 வருடங்கள், அதன்படி அவருடைய எடை 16 டன்னாகவும் அமைந்துள்ளது இத்தலத்தில் தட்சிணாமூர்த்தியின் தனிசிறப்பு.

இவருடைய ரூபம் பக்தர்கள் வேண்டியதை வேண்டியவாரு அனைவருக்கும் அருள்பாலிக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

இவரை வழிபட்டால் ஏற்படும் பலன்கள்

கல்வி, செல்வம், திருமணத்தடை நீங்குதல், குழந்தை பாக்கியம், குடும்பகஷ்டங்கள் நீங்குதல், கணவன் மனைவி ஒற்றுமை, நவகிரகத்தால் ஏற்படும் அனைத்துவிதமான தோஷங்களும் நீங்குதல், இந்த குபேர ஸ்ரீ குரு தஷ்ணாமூர்த்தியை அனைவரும் வந்து வழிபடுவோம்.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண்: 9811161370

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
இணையதளத்திற்கும், ஆன்மிகமலர் மெயில் புத்தகத்திற்கும் விருப்ப சந்தா செலுத்தி, நமது இதழின் வளர்ச்சிக்கு ஊக்கமளியுங்கள்
Scan to Pay with any BHIM UPI App


ஆன்மிகமலர் .காம்


Scan to Read aanmeegamalar Website
www.aanmeegamalar.com



ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

இணையதளம்
சார்பாக வெளிவந்த

**கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயண்டி சித்தர் சிறப்பு மலர்,**

**2023 காலண்டரைத்**

தொடர்ந்து

அழகிய வண்ணப் பக்கங்களில் அற்புதமான தகவல்களுடன் பழனி சிறப்புகள் பற்றிய செய்திகளுடன் தயாராகிறது...

# பழனி முருகன் கோவில் கும்பாபிஷேக சிறப்புமலர்

வியாபார அன்பர்கள், தொழில் நிறுவனத்தினர் தங்கள் விளம்பரங்களுக்கும், ஆன்மிக அன்பர்கள் இதழ் குறித்த தகவலை பெறவும் தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு:

Ph:9994323622 W.No:9444228203






பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள



கீதாசமையல்
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# ஆன்மீக வழியில் அமைதி

55

மனிதனுக்கு விருப்பமான பிரியமான எண்ணங்கள் ஆனந்தமயகோசம் என்று கருதப்படுகிறது. நமது ஸ்தூல சரீரம் விழித்துக்கொண்டு இருக்கும்போது நமது மனம் எப்போதெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறதோ அது ஆனந்தமயகோசமாகும். நாம் எந்தப்பொருளை பார்க்கும்போது அதை அடையும்போது அதனை அனுபவவிக்கும்போது நமது மனம் மகிழ்ச்சி அடைகிறதோ அது ஆனந்தமயகோசமாகும். எடுத்துக்காட்டாக மனிதனுக்கு விருப்பமான நண்பனை முதலில் பார்க்கும்போது, அவனிடம் பேசும்போது, பேசி முடித்தபின் இருவர் அடையும் மகிழ்ச்சி போன்றவை ஆனந்தமய கோசம்.

ஒரு பொருளை பார்க்கும்போது அல்லது அனுபவவிக்கும்போது துக்கமாக இருந்து, நமது மனம் பக்குவப்பட்ட நிலைக்கு வரும்போது அந்தப்பொருளை அனுபவவிக்கும்போது மகிழ்ச்சி அடைவது ஆனந்தமய கோசமாகிறது. எடுத்துக்காட்டாக ஒருவர் ஆரம்பத்தில் ஒரே இடத்தில் அமர்ந்துகொண்டு பிரசங்கம் செய்பவர் கூறும் ஆன்மிகக் கருத்துக்களைக் கேட்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் உடல் அளவில் முதுகுவலி, கால்வலி போன்ற துன்பத்தை அப்போது அனுபவவிக்கிறான். சிறிது நேரத்தில் அவன் மனம் முழுஈடுபாட்டுடன் பிரசங்கம் செய்பவர் கூறும் ஆன்மீகக் கருத்துக்களை கேட்கும்போது அவன் ஆனந்தம் கொள்கிறான். அப்போது அவனுடைய முதுகுவலி உடல்வலியெல்லாம் மறந்து அப்போது ஆன்மீக கருத்துக்களை கேட்டு ஆனந்தப்படுகிறான்.

நாம் எந்த கோசத்தில் எப்படி இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள முடியும். அதேபோல் நாம் ஒரு கோசத்தில் இருந்து எப்படி விலகிச் செல்கிறோம் என்பது பற்றி சாஸ்திரம் கூறுகிறது. காலையில் விழித்துக்கொண்டு இருப்பதிலிருந்து இரவு தூங்கச்செல்லும்வரை நாம் ஏதோவொரு கோசத்தில்தான் நமது மனம் இருந்து கொண்டு இருக்கும்.

நமக்கு வரக்கூடிய சுகதுக்கங்கள் எதன் நிமித்தமாக வருகிறது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவ்வாறு சிந்தித்து பார்க்கும்போது நாம் எந்தக் கோசத்தில் இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள முடியும் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதாவது நமது மனம் எதனால் துக்கம் அடைகிறது. எதனால் மகிழ்ச்சி அடைகிறது என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது மனதின் நிலையை வைத்து எந்த கோசத்தில் இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக பெற்றோர்கள் புதிய ஆடைகள் தங்கள் மகன் மகளுக்கு எடுத்துக் கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த ஆடைகள் மகனுக்கோ, மகளுக்கோ ஏதோ காரணத்தால் பிடிக்காமல் இருக்கலாம். அந்த ஆடையில் உள்ள டிசைன், ஆடையின் நிறம் அதன் தன்மை போன்றவையாகக்கூட இருக்கலாம். அவ்வாறு மகன், மகள் தாங்கள் அணியும் ஆடையில்



முழுக் கவனம் செலுத்தும்போது அவர்கள் அன்னமயகோசத்தில் இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ள முடியும். ஸ்தூல சரீரம் ஆடையுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் இது அன்னமய கோசத்தில் அவர்கள் மனம் இருக்கிறது என்று அறிந்து கொள்ளலாம்.

நாம் உண்ணும் உணவில் நமது மனம் முழுக்கவனம் செலுத்தும்போது பிராணமய கோசத்தில் இருக்கிறோம். பிராணன் என்பது நாம் உண்ணும் உணவோடு சம்பந்தப்பட்டிருப்பதால் பிராணமய கோசத்தில் இருக்கிறோம் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

நாம் கோபம், சாந்தம், விருப்பு வெறுப்பு போன்ற உணர்ச்சிகளின் மீது வசப்படும்போது நாம் மனோமய கோசத்தில் இருக்கிறோம் என்று அறிந்து கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக இருவர் சந்தித்துப் பேசும்போது திடீரென்று ஒருவர் உணர்ச்சி வசப்பட்டு கோபமாக பேசுவது, அல்லது இருவர் செயல்பாடுகளில் நல்லநிலையில் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டு தங்களுக்குள் ஆனந்தப்படுவது போன்றவை மனோமயகோசத்தில் இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளலாம்.

மனிதர்கள் அறிவுக்கூர்மையுடன் இருக்க வேண்டும் அல்லது செயல்படவேண்டும் என்று விரும்பி செயல்படுவது விஞ்ஞானமயகோசம் ஆகும். மகாத்மா காந்தி சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று விருப்பப்பட்டு அவர் மனம் அதில் முழு ஈடுபாட்டுடன் இருந்திருக்கிறார். அவரைப்போல் உடல் அளவில் மனதளவில் கஷ்டப்பட்டாலும் அதிலிருந்து விலகாமல் இருப்பது விஞ்ஞானமயகோசம் ஆகும். எடுத்துக்காட்டாக ஒருவர் புத்தகங்கள் படிப்பதில் ஆர்வமுடையவராக இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் விரும்பி படிக்கும் புத்தகங்கள் மூலம் மனதில் அப்போது ஏற்படக்கூடிய சுக துக்கங்கள் ஏற்பட்டால் அது விஞ்ஞானமயகோசம். இவைகளை எல்லாம் கடந்து எந்தநிலையில் இருந்தாலும் இன்பத்தில் மட்டும் நமது மனம் இருந்தால் அது ஆனந்தமய கோசம்.

சிலருக்கு அவர்களைப் பற்றி எப்படித் தூற்றிப் பேசினாலும் அவர்களைக் கஷ்டப்படுத்தினாலும் அவர்களது மனம் கவலைப்படுவதில்லை. அவர்களுக்கு வேண்டியது மூன்று வேளையும் பசியாற்ற சாப்பாடு வேண்டும் என்ற மனநிலையில் இருப்பவர்கள், அன்னமயகோசத்தில் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். அவர்களது எண்ணம் உணவின்மீது மட்டும் கவனம் இருப்பதால் உடல் சம்பந்தப்பட்டிருப்பதால் அவர்கள்

## தேனி, மூர்த்தி நாயக்கன் பட்டியில் ஐயப்பன் பூப்பல்லக்கில் ஊர்வலம்!



தேனி மாவட்டம், சின்னமனூர் அருகில் உள்ள மூர்த்தி நாயக்கன்பட்டியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ தர்மசாஸ்தா யாத்திரை குழு சார்பாக மாபெரும் முதலாம் ஆண்டு அன்னதானம் நடைபெற்றது. ஏராளமான ஐயப்ப பக்தர்கள் கலந்து கொண்டு அன்னதானத்தை சிறப்பித்தார்கள், அதைதொடர்ந்து ஐயப்பன் பூப்பல்லக்கில் ஊர்வலமாக புறப்பட்டு ஊர் முழுவதும் வீதி உலா வந்தார்.

அன்னமயகோசம் என்ற நிலையில் இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளலாம்.

நாம் விஞ்ஞானமயகோசம், மனோமய கோசத்தில் இருக்கும்போது நாம் உண்ணும் உணவின் சுவை தெரியாது. அதற்குக் காரணம் நமது மனம் கற்பனையிலும், அறிவிலும் முழு ஈடுபாடுடன் இருக்கும்போது நாம் உண்ணும் உணவு சுவைக்காது. சாப்பிடுவதற்குக்கூட விருப்பம் இருக்காது. எடுத்துக்காட்டாக எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், கவிஞர்கள் போன்றவர்களைக் கூறலாம். பொதுவாக விஞ் ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபடும்போது உணவின்மீது நாட்டம் ஏற்படுவதில்லை.

நாம் எந்தக் கோசத்தில் இருந்தாலும் அறிவுப்பசிக்கு வரவேண்டும். ஒருவர் விஞ் ஞானமய கோசத்திற்கு வருவதற்கு அவர் மனம் துக்கப்பட்டாலும், உடல் கஷ்டப்பட்டாலும் அதனை சகித்துக்கொண்டு அவர் மனதைப் பக்குவ நிலைக்குக் கொண்டு வரவேண்டும். அவ்வாறு மனதை பக்குவநிலைக்கு வரும்போது விஞ்ஞானமய கோசத்திற்கு வந்து விடலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. விஞ்ஞானமய கோசத்தில் இருக்கும்போது அன்னமய, பிராணமய கோசங்கள் போன்றவை அவர்களிடம் அப்போது வருவதில்லை என்று சாஸ்திரம் கூறுகிறது.

இதேபோன்று ஒவ்வொரு கோசத்தையும் வைராக்கியத்துடன் மனம் கடந்து சென்றால் ஆத்மாவை அறிந்து கொள்ளலாம் என்று சாஸ்திரம் கூறுகிறது. பூரணஞானம் அடைந்த ஞானிகள், முனிவர்கள் போன்றவர்கள் பஞ்சகோசங்களில் ஏதோவொரு கோசத்தில் இருப்பார்கள். ஆனால் அவர்கள் கோசத்தின் கட்டுப்பாட்டில் நம்மைபோன்று இருக்க மாட்டார்கள். தங்கள் தவத்தின் வலிமையால் பஞ்சகோசங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு மனிதனும் ஏதோவொரு ஆசையில் இருந்தால் அவன் ஏதோவொரு கோசத்தின் கட்டுபாட்டில் இருப்பான். மனிதனுக்கு உலக ஆசைகள் இருக்கும்வரை பஞ்சகோசங்களிருந்து விலகவோ தப்பிக்கவோ அவனால் முடியாது என்று சாஸ்திரம் கூறுகிறது.

மனிதர்களுக்கு மட்டும் தமோ, ரஜோ மற்றும் சத்துவ என மூன்று குணங்கள்



எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்

இருக்கும். மனிதனுடைய மன நிலைக்கு ஏற்ப மூன்று குணங்களும் மாறி மாறி வந்துகொண்டுதான் இருக்கும். மனிதனைப்போல் உலகில் வாழும் மற்ற உயிரினங்களுக்கு சத்வகுணம் என்பது இருப்பதில்லை.

நாம் உலகத்தில் இருந்து பலவற்றை அனுபவிக்கும்போது நான், என்னுடையது போன்ற சொற்களைப் அடிக்கடி பயன்படுத்துவோம். சில நேரங்களில் நான் என்று பயன்படுத்தும் இடங்களில் என்னுடையது என்பதைப் பயன்படுத்துவோம் என்னுடைய வீடு, என்னுடைய நிலம், என்னுடைய பேனா, புத்தகம் இதில் நான் என்பதைப் பயன்படுத்துவதில்லை,.

நாம் நன்கு சிந்தித்துப் பார்த்தால் நாம் எதையெல்லாம் என்னுடையது என்று நினைத்துக்கொண்டு கூறுகிறமோ அது உன்னுடையது அல்ல. என்னுடையது என்று எதை மனம் எண்ணிக்கொண்டு இருக்கிறதோ அவையெல்லாம் உன்னுடையது அல்ல என்று சாஸ்திரம் கூறுகிறது. எடுத்துக்காட்டாக என்னுடைய நிலம் என்று கூறிக்கொண்டிருந்தவன் அவன் மறைந்தபின்பு அந்த நிலம் அவனுடையது அல்ல வேறு ஒருவருடைய நிலமாக மாறி விடும். அந்த நிலத்தை வாங்கியவன் என்னுடையது என்று கூற ஆரம்பித்து விடுவான்.

மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகள் போன்றவற்றை நமது மனம் நான் என்று எண்ணிக்கொள்வதால் மனமும் உடலும் துன்பப்படுகிறது. அவையெல்லாம் நான் அல்ல என்று மனம் பக்குவநிலைக்கு வர வேண்டும். அவ்வாறு மனம் பக்குவநிலைக்கு வரும்போது சரீரமும் மனமும் படக்கூடிய துன்பங்களை மறந்து ஆனந்த நிலைக்கு மனம் சென்று விடுகிறோம். அதற்கு ஆன்மீக வழியில் சென்று மனப்பயிற்சி பெற வேண்டும். நான் என்பது உடல், மனம் ஆத்மா அல்ல. மூன்று சரீரங்கள், மூன்று அவஸ்தைகள் போன்றவற்றுக்கு அப் பாற்பட்டது வேறுபட்டது அழிவு இல்லாதது பரம் பொருள் ஆத்மா என்று சாஸ்திரம் கூறுகிறது.

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
சந்தா

**UPI மற்றும் வங்கி வாயிலாகவும் சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm BHIM BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**